Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | வைகாசி 02 செவ்வாய்க்கிழமை (15.05.2012) | பக்கங்கள் 20 | ஓசை - 227

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo 20000 Rs only 1st Year
CIMA-UK 14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1328) MCS Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction


புனரமைக்கப் படவில்லை
05


வருட இறுதியில் ஆரம்பம்
12


வாழ்க்கையை தீர்மானிப்பது...
04


உடுவில் சம்பியன்
07


நஞ்சூட்டிக் கொலை
03


# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு வரும் என்கிறார் ரணில்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பை அழைத்துவர முடியுமென ஐ.தே. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் இடையே நேற்று முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



## அமெரிக்கா சென்றார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று அதிகாலை அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் விடுத்திருந்த அழைப்பை அடுத்து அவர் அங்கு விஜயம் செய்கிறார்.

அண்மையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்திருந்த யோசனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர், வெளியுறவு அமைச்சர் அமெரிக்கா செல்லும் முதல் சந்தர்ப்பம்

19 ஆம் பக்கம் பார்க்க

## மர்மப்பொருள் கையாளும் விடயம் சிறுவர்கள் குறித்து கவனம் அவசியம்

### வட, கிழக்கு பெற்றோருக்கு அறிவுறுத்து

வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் மர்மப் பொருட்களை கையாள்வதைத் தடுப்பது தொடர்பாக பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் நிலத்திலிருந்து கண்டெடுத்த பொருட்களை கையாள முற்பட்டபோது இடம்பெற்ற வெடிச் சம்பவங்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

குறிப்பாக சாவகச்சேரி, வவுனியா, புளியங்குளம், அம்பாறை போன்ற பிரதேசங்களில் இத்தகைய சம்பவங்கள் அதிகம் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெற்றோர் இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலி கொலை வழக்கில் முதலாம் எதிரிக்கு மரணதண்டனை

(திருநெல்வேலி)

அச்சுவேலி கொலை வழக்கில் முதலாம் எதிரிக்கு யாழ். மேல்நீதிமன்றம் நேற்றைய தினம மரணதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அச்சுவேலியில் வைரவி சுபாஸ் என்பவரைக் கொலைசெய்ததாக ஆறு பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. சுந்தரம் இமயகாந்த், சுந்தரம் விமலகாந், சுந்தரம் விஜயகாந், பொன்னு சுந்தரம், சுந்தரம் ரஜனிகாந், சுந்தரம் ஸ்ரீகார் ஆகியோரே எதிரிகளாவர். [illegible]கள் தந்தையும் பிள்ளைகளுமாவர். இவர்கள் அச்சுவேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக கூட்டம் கூடியமை, அக்கூட்டத்தில் உறுப்பினராக இருந்து வைரவி சுபாஸ் என்பவருக்கு மரணம் விளைவித்தமை போன்ற குற்றங்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது. பின்னர் சட்ட மா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் தீர்ப்புக்காக நேற்று இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவது எதிரி சுந்தரம் இமயகாந் மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கப்பால் நிரூபிக்கப்பட்டு கொலைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## பல இலட்சம் பெறுமதியான நகை, பணம் பட்டப் பகல் வேளை கொள்ளை

### யாழ். ஆத்திசூடி வீதியில் சம்பவம்

(நல்லூர்)

பட்டப் பகல் வேளை வீட்டில் யாரும் இல்லாத நிலையில் பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் யாழ். கந்தர்மடம், ஆத்திசூடி வீதியிலுள்ள வீடொன்றில் நேற்றைய தினம் கொள்ளையர் குழுவொன்றினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கந்தர்மடம், ஆத்திசூடி வீதிப் பகுதியிலுள்ள சோமு தங்கராசா என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம்

19 ஆம் பக்கம் பார்க்க



## மீள்குடியேற்ற நடவடிக்கை அமெரிக்க நிறுவனம் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் புகழ்ந்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோனுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பின் போதே அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவன பிரதிப் பணிப்பாளர் ட்ரேவர் ஹியூப்லிங் இவ்வாறு தெரிவித்ததாக மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவி புரிவ்தாக அவர் இதன்போது உறுதி அளித்துள்ளார்.

இன்னும் 3 மாதங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெற்றுவிடும் எனவும் அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த குறைந்தது 5 வருடங்கள் செல்லும் எனவும் அமைச்சர் குணரத்ன வீரகோன் இங்கு தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

8 ஆம் பக்கத்தில்




## இலங்கை மீது புதிய தாக்குதல் சொல்ஹெய்ம் சுரேஷ் இணைவு

### என்கிறது ஐலன்ட்

(கொழும்பு)

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் ஒஸ்லோவில் இன்றைய தினம் ஒன்றிணைந்து இலங்கை மீது புதிய தாக்குதலைத் தொடுகவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகமான ஐலன்ட் செய்தி

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு தேர்தலை சந்திக்க அச்சப்படுகிறது அரசாங்கம்

### குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

தோல்விப் பீதியாலேயே அரசு வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி. ஒரே தடவையில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.சுயாதீன தேர்தல் குழுவை அமைத்து ஜனநாயக முறைப்படி தேர்தலை

19 ஆம் பக்கம் பார்க்க

# பொலிஸார் மீது தாக்குதல் குருநகர் வாசிக்கு சிறை

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரை அடித்துக் காயப்படுத்திய நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் மேற்படி நபர் மது போதையில் சென்றுள்ளார். குறித்த பகுதியில் பொலிஸார் நடத்திய கலந்துரையாடலின்போது அங்கு நின்ற பொலிஸ் பரிசோதகர் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# புதிய வாக்காளர் பட்டியல் மாத இறுதியில் வெளிவரும்

## யாழ். தேர்தல் அலுவலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 25 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையுாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்களின் இரட்டைப் பதிவு காரணமாக பெயர்ப்பட்டியல் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது மாவட்ட மட்டம் மற்றும் வேறு மாவட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு இரட்டைப் பதிவுகள் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட வாக்காளர் பெயர்ப்பட்டியல் வெளியிடப் படவுள்ளது.

அந்தவகையில் நாற்பது வீத மானவர்கள் தமக்கு விரும்பிய இடத்தில் பதிவுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தமைக்கு அமைவாக இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகத்தில் பெயர்ப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும்.

பார்வைக்கு வைக்கப்படும் பெயர்ப்பட்டியலில் காணப்படும் பெயர் மாற்றங்கள். விலாசம், பிழையாக இருப்பின் அவற்றை சுட்டிக்காட்டி கிராம சேவையாளரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் தேர்தல் திணைக்களத்திற்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில், பெயரில் ஏற்படும் மாற்றங்கள், திருத்தங்களைச் சரி செய்து வாக்காளர் பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 25ஆம் திகதி வெளியிட இலகுவாக இருக்கும் எனவும், அதற்கு வாக்காளரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமெனவும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (எஸ்)

# டெங்கு நுளம்புக் கட்டுப்பாடு கோப்பாயில் நடவடிக்கை

(திருநெல்வேலி)

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி கோப்பாய் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.


கிராம அலுவலர்கள், பொலிஸார், இராணுவத்தினர், குடும்ப நல மாது? பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சமுர்த்திய உத்தியோகத்தர், தொண்டர்கள் எனப் பலரும் இணைந்த குழு ஒன்று தினமும் இப்பிரிவில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றுக்குச் சென்று நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளது. இதற்காக கோப்பாய் சுகாதாரப் பகுதி ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

நுளம்புகள், குடம்பிகள் உற்பத்தியாகும் வகையில் இடங்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. இவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருடன் ஒத்துழைத்து நுளம்புக் கட்டுப்பாடு வாரத்தை கடைப்பிடிக்கும் வகையில் தமது இருப்பிடங்களை துப்பரவாக வைத்திருக்குமாறு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (137)

# புதுப்பொலிவுடன் வேலணையில் இலங்கை வங்கிக் கிளை திறப்பு





(வேலணை)

புனரமைக்கப்பட்டு புதுமெருகூட்டப்பட்ட இலங்கை வங்கிக் கிளை நேற்று வேலணையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்நிகழ்வில், இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் திருமதி வைரவவாதன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா (போல், மற்றும் இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமைத்துவ அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும், வேலணை இலங்கை வங்கியின் முகாமையாளர் மற்றும் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

இவ்விழாவின் போது இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் உரையாற்றுகையில், தீவுப் பகுதியில் மக்களுக்கான சிறந்த சேவையினை இலங்கை வங்கியின் ஊடாக நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்தார். விவசாய கடன் திட்டங்களையும், கடற்றொழிலாளர்களுக்கான கடன் திட்டங்களையும் வழங்கி வருவதாகவும், தாங்கள் சிறந்த சேவையினை ஆற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து வேலணைப் பிரதேச சபை தவிசாளர் உரையாற்றுகையில், யுத்த அனர்த்த காலத்திலும் மக்கள் முன்னிலையில் நின்று சேவையாற்றிய இலங்கை வங்கியின் முகாமையாளர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் மக்கள் சார்பாகவும், தன்து சார்பாகவும நன்றியினைத் தெரிவித்தார். அத்துடன் தீவுப்பகுதியில் சுய உதவித் திட்டங்களை வழங்குவதில் முதன்மை வங்கியாகத் விளங்கிக் கொண்டிருக்கும் இவ்வங்கியானது இனிவருங் காலங்களிலும் மக்களுக்குச் சிறந்த சேவையினை வழங்க வேணடும் எனவும் தெரிவித்தார். (85)

# முல்லை மாவட்டத்தில் சதுரங்கப் போட்டிகள் இன்று

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் மாவட்ட மட்ட உள்ளக வெரு விளையாட்டுத் தொடர் வரிசையில் இன்று மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் சதுரங்கப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் துணுக்காய் வலயம் மற்றும் முல்லைத்தீவு வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 15 வயதுப் பிரிவு ஆண்/பெண் மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண்/பெண் போட்டியாளர்களுக்கிடையில் நடைபெறவுள்ளது.

15 வயது ஆண்கள் பிரிவில் நடைபெறும் போட்டியில் - முதலாவது போட்டியில் மு/வித்தியானந்தா கல்லூரியினை எதிர்த்து மு/வன்னி விளாங்குள அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் - மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியை எதிர்த்து மு/மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

மூன்றாவது போட்டியின் முதலாவது போட்டியில்-வெற்றி பெற்ற அணியை எதிர்த்து மு/யோகபுரம் மகாவித்தியாலய அணி மோதும்.

நான்காவது போட்டியில் - மு/விஸ்வமடு மகாவித்தியாலயத்தினை எதிர்த்து இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்ற அணி மோதவுள்ளது.

தொடர்ந்து அரை இறுதிப் போட்டிகளும், இறுதிப் போட்டியும், மூன்றாம் இடத்திற்கான போட்டியும் இடம்பெறவுள்ளது.

15 வயதுப் பெண்களுக்கான போட்டிகளில் -

முதலாவது போட்டியில் - மு/வித்தியானந்த கல்லூரியை எதிர்த்து மு/யோகபுரம் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் - மு/நட்டான்கண்டல் அ.த.க.பாடசாலையை எதிர்த்து மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

மூன்றாவது போட்டியில் - மு/அனிஞ்சக்குளம் தமிழ் வித்தியாலயத்தை எதிர்த்து முதலாம் போட்டியில் வெற்றி பெற்ற அணி மோதும். மூன்றாவது போட்டியைத் தொடர்ந்து அரை இறுதிப் போட்டிகள் இடம்பெறும்.

தொடர்ந்து மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டியும், மூன்றாம் இடத்தினைத் தெரிவு செய்வதற்கான போட்டியும் இடம்பெறவுள்ளது.

19 வயதுப் பெண்களுக்கான போட்டிகளில் -

முதலாவது போட்டியில் மு/மல்லாவி மத்திய கல்லூரியை எதிர்த்து மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணியை எதிர்த்து மு/அலம்பில் றோ.கத்தோலிக்க வித்தியாலயம் மோதும்.

மூன்றாவது போட்டியில் மு/வித்தியானந்தா கல்லூரியை எதிர்த்து முதலாம் போட்டியில் வெற்றி பெற்ற அணி மோதும்.

நான்காவது போட்டியில் மு/யோகபுரம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து இரண்டாம் போட்டியில் வெற்றி பெற்ற அணி மோதும்.

தொடர்ந்து அரை இறுதிப் போட்டியும், இறுதிப் போட்டியும், மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியும் இடம்பெறும்.

19 வயது ஆண்களுக்கான போட்டியில் -

முதலாம் போட்டியில் - மு/மல்லாவி மத்திய கல்லூரியை எதிர்த்து மு/விஸ்வமடு மகாவித்தியாலய அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில்- மு/வன்னி விளான்குளம் தமிழ் வித்தியாலயத்தை எதிர்த்து மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

மூன்றாவது போட்டியில் மு/வித்தியானந்த கல்லூரியை எதிர்த்து முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற அணி மோதும்.

நான்காம் போட்டியில் -மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்ற அணி மோதும்.

தொடர்ந்து இப்பிரிவில் அரை இறுதிப் போட்டிகளும், மூன்றாம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டியும், இறுதிப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள சதுரங்கப் போட்டியுடன் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் பெரு விளையாட்டு மற்றும் உள்ளக விளையாட்டுக்கள் அனைத்தும் முடிவுக்கு வருகின்றன.

தொடர்ந்த மாகாண மட்டத்திற்கு மெய்வல்லுநர்களைத் தெரிவு செய்வதற்கான மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (42)

## உண்டியல் உடைத்து பணம் திருட்டு

வல்லைவெளியில் உள்ள முனியப்பர் கோவில் உண்டியல் நேற்று முன்தினம் இரவு திருடர்களால் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஆலய அடியார்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். பொலிஸாரின் விசாரணை தொடர்கிறது. (17)

# சாந்தை பாலக்கட்டை வீதி நெல்சிப் திட்டத்தில் புனரமைப்பு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு சாந்தை உந்துவத்தை பாலக்கட்டை வீதி தார் இட்டு செப்பனிடப்படவுள்ளது.

நெல்சிப் திட்டத்தின் ஊடாக இவ்வீதி புனரமைப்பதற்கென சுமார் 90 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.030 கிலோ மீற்றர் நீள்மான இவ்வீதி 4.5 மீற்றர் அகலமானதாக அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த இவ்வீதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியின் பயனாக நெல்சிப் திட்டத்தின் ஊடாக புனரமைப்புக்கென உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (54)

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



9 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர் : கி.மதுஷன்,

முகவரி: பிட்டியெல்லை, களபூமி, காரைநகர்.

அன்பு என்னும் செயல்முறை எப்போதும் விடுதலைக்கான செயல்முறையாக இருக்க வேண்டும், சிக்கிக் கொள்வதற்கான செயல்முறையாக இருக்கக்கூடாது. - சத்குரு

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## போரால் புலம்பெயர்ந்தோரே வருக!

2011 ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படவுள்ளது. இந்த வாக்காளர் பட்டியலின்படி யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை மேலும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எட்டு இலட்சத்திற்கு மேல் இருந்த யாழ்ப்பாண வாக்காளர் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 4 இலட்சத்து 85 ஆயிரமாகக் காணப்பட்டது. மீண்டும் 2011 இல் வாக்காளர் எண்ணிக்கையை மறுகணக்கீடு செய்தபோது, மேலும் சில ஆயிரங்கள் குறைவடைந்துள்ளதாக யாழ் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலர் இரட்டைப் பதிவை மேற்கொண்டிருந்தது மீள்பரிசீலனையின்போது அவதானிக்கப்பட்டு அவை நீக்கப்பட்டதாலேயே வாக்காளர்கள் எண்ணிக்கை மேலும் குறைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், யாழ் மாவட்டத்திற்கு 9 ஆக இருந்த நாடாளுமன்ற ஆசனங்கள் 5 ஆகக் குறைவடையவுள்ளது என்பது ஒருபுறமிருக்க, நாடு தழுவிய ரீதியில் தமிழ் மக்கள் மேலும் சிறுபான்மையினராகிறார்கள் என்பதும் கவனத்திற்குரியது.

சனத்தொகைக் கணக்கெடுப்பாளர்களின் கணிப்பீட்டின்படி, நாட்டின் மொத்த சனத்தொகையில் தமிழ் மக்கள் தொகையினது சதவீதம் வெகுவாகக் குறைவடைந்திருக்கிறது என்பது தெரியவந்திருக்கிறது.

அதாவது, இந்த நாட்டின் சிறுபான்மைப் பிரச்சினை என்பது பிரதானமாகத் தமிழர்களைக் குறித்ததே என்று நம் நினைவினுள் பதிந்திருப்பதை, இன்றைய சூழ்நிலை மறுபரிசீலனை செய்ய நிர்ப்பந்திக்கிறது. நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின்படி பார்த்தாலும், இனிவரும் தேர்தல்களின் முடிவில் இனரீதியாக இரண்டாவது பெரும்பான்மையாகத் தமிழ் உறுப்பினர்கள் அமைவதற்கு வாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

புலம்பெயர்ந்து பிறநாடுகளுக்குச் சென்றிருக்கும் தமிழர்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகவே இது தெரிகிறது. இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் சுமார் பத்து இலட்சம் பேரளவில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பொருளாதார வசதிகளுக்காகவும், வேறு நலன்களுக்காகவும் அங்கேயே தங்கிவிட முடிவு செய்துவிட்டவர்களிடம் நாம் எதுவும் கேட்க முடியாது. ஆனால், நாட்டைப் பற்றியும் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான அரசியலுரிமைகள் பற்றியும் பேசிக்கொண்டிருப்பவர்கள் இங்கு தமிழர்களின் சனத்தொகைக் குறைவு பற்றிக் கவலைப்பட்டாக வேண்டும்.

அவர்கள் இங்குள்ள மக்களுடன் வந்து இணைந்து நின்று உரிமைகளைக் கேட்க வேண்டும்; அந்தப் பெரும்பான்மைப் பலத்தை இங்கு ஏற்படுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லை. புலிகள் அமைப்பில் ஆயுதமேந்திப் போராடியவர்களே இங்கே இருக்கும் சூழலில், தமிழுணர்வுள்ள புலம்பெயர்ந்தோர் இங்கு திரும்பி வர முடியாதென்றில்லை.

இன்றும் தாய்நாட்டோடு உணர்ச்சிகரமான ஈடுபாட்டை வைத்துள்ள புலம்பெயர்ந்த பழைய தலைமுறையினர் உடனே முடிவெடுக்க வேண்டிய தருணம் இது. ஏனெனில், அடுத்துவரும் தலைமுறையினர் சுற்றுலா தவிர வேறு எதற்குமாக இனி இங்கே வர யோசிக்கப் போவதில்லை.

இங்குள்ளவர்கள் ஏதோ கராக்கிரகத்தில் அடைபட்டிருப்பது போலவும், இவர்களைக் காப்பாற்ற வெளியில் இருந்து முயற்சிகள் செய்துகொண்டிருப்பது போன்ற நாடகங்கள் இனியும் வேண்டாம். இதுவரை காலமும் காப்பாற்றிய அழகை எல்லோரும் கண்டுவிட்டோம். தமிழ் மக்கள் அளித்துள்ள பாரிய விலைக்கு ஈடான ஏதாவது முன்னேற்ற நகர்வொன்றை இந்த உணர்ச்சிகர ஆதரவு முழக்கங்கள் தந்ததுண்டா? இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

வெற்று முழக்கங்களை விட்டு பொறுப்புடன் யோசிக்க வேண்டிய வேளை இது.

- ஆசிரியர்

# மட்டக்களப்பில் மாடுகள் நஞ்சு வைத்துக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எல்லைக் கிராமமான மங்களகம கெவிலியமடு பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற தமிழர்களது மாடுகள் நஞ்சூட்டப்பட்டு கொல்லப்பட்டதாக பண்ணை உரிமையாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு 35 ஆம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரராசா ரஞ்சன் என்பவரது ஆறு மாடுகள் நஞ்சருந்தி உயிரிழந்துள்ளதாகவும் சாமித்தம்பி பாலாத்தப்பிள்ளை என்பவரின் 75 பசுமாடுகள் காணாமல் போயுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் மேய்ச்சல் தரையில் அத்துமீறிக் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாலேயே மேற்படி மாடுகள் கொல்லப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் எனக் கூறும் அரசாங்கம் மறுபுறத்தில் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைகளில் குடியேற்றங்களை மேற்கொள்வதன் மூலம் தங்களது கால்நடைகளை வளர்க்க முடியாமல் தடைவிதிப்பதாகவும் கடந்த காலங்களிலும் இவ்வாறு பல மாடுகள் சுட்டுக் கொல்லப்பட்டும், களவாட்டப்பட்டும் உள்ளதாகவும் இதனால் இப்பகுதி பண்ணையாளர்களின் வாழ்வாதாரம் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளதா கவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## நோயாளரை அனுமதிக்க மறுத்த மருத்துவமனைக்கு எதிராக விசாரணை

(பிலியந்தலை)

சிகிச்சைக்காக பிலியந்தலை வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாமை மற்றும் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படாமை தொடர்பாக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேல் மாகாண சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அமல் ஹர்ஷடி சில்வா கூறியுள்ளார்.

இரவு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளரைப் பாதுகாவலர் ஒருவர் இல்லாத காரணத்தினால் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு பிலியந்தலை வைத்தியசாலையின் ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக குறித்த நோயாளர் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணிவரை வைத்தியசாலையின் நுழைவாயில் அருகே விழுந்து கிடந்தார்.

பின்னர் பிலியந்தலை வைத்தியசாலையில் இருந்து களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நோயாளர், மேலதிக சிகிச்சைகளுக்காக தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த நோயாளரின் தலைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தேசிய வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் வீழ்ந்து 4 வயதுக் குழந்தை மரணம்

(ஏறாவூர்)

ஏறாவூர் பெரிய பாலத்தடி உள் வீதியில் நீர் வடிகால் கட்டின் மீது நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பிடித்து விளை யாடிக் கொண்டிருந்த நான்கு வயதுக் குழந்தை மோட்டார் சைக்கிள் விழுந்ததில் அதில் நசுங்குண்டு மரணமானது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் திடீர் மரண விசாரணையதிகாரி எம்.எஸ்.எஸ். நஸீர் தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த குழந்தை ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக அவசர சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது. ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆசிரிய நியமனங்கள் தாமதம்; நாளை தந்திப் பிரசாரம்

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரி கற்கைநெறியை நிறைவு செய்து வெளியேறிய பயிற்சியாளர்களுக்கு கல்வி அமைச்சு நியமனங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை ஆட்சேபித்து நாளை 3000 தந்திகளை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி வாண்மையாளர் சங்கம் தயாராகிவருகின்றது.

மாகாணத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலையிட வேண்டுமெனவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த 6 மாதங்களாக 3000 பயிற்சியாளர்கள் நியமனங்களுக்காக காத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து கட்சிகளும் பேச்சு நடத்த வேண்டும்

(கொழும்பு)

இரு கட்சிகள் பேச்சு நடத்த வேண்டும் என்ற எண்ணக் கருவைத் தாண்டி அனைத்துக் கட்சிகளும் பேச்சு நடத்த வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கு அரசாங்கம் வந்துள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது ஆளும் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் தனித்து பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை ஆளும் கட்சியும் கூட்டமைப்பும் ஏற்கனவே போதுமான பேச்சுக்களை நடத்திவிட்டன.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க அரசாங்கம் அர்ப்பணிப்பை வெளிக்காட்டியுள்ளதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீர்வைக் காண்பதற்கு தனது அர்ப்பணிப்பை வெளிக் காட்டவேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்த செயற்பாடு தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பல தடவைகள் தெளிவாகக் கூறிவிட்டோம். அதாவது இரு கட்சிகள் பேச்சு நடத்தி தீர்வு காண்பது என்ற கோட்பாடு இனி ஏற்புடையதாக அமையாது. மாறாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற விடயமே பொருத்தமாக அமையும்.

எனவே நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அரசாங்கம் நியமித் துள்ள நிலையில், அதில் அங் கத்துவம் வகிப்பதே எதிர்க் கட்சிகள் தற்போது செய்ய வேண்டிய விடயமாகும் என் றார்.

## அலங்கார உற்சவம்

(பூநகரி)

பூநகரி - கறுக்காய்தீவு கல்வெட்டுத்திடல் கந்தசுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம் பெறும்.

இவ் வருடாந்த உற்சவத்தில் அனைவரும் கலந்து கொண்டு சுவாமியின் அருளாசியை பெறுமாறும் உற்சவ காலத்தில் பூக்கள், பால், தயிர், என்பவற்றை தந்து தவுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகின்றார்கள். (112)

# எதிர்கால வாழ்க்கையை ஆரம்பக் கல்வியே தீர்மானிக்கிறது

## மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஜீவா

(மானிப்பாய்)

ஒருவருடைய ஆரம்பக்கல்வியே அவருடைய எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. எனவே ஆரம்பக் கல்வியை எல்லோரும் சிறப்பாகக் கற்க வேண்டும் என மானிப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான வெ.அன்ரன் ஜோன்சன் (ஜீவா) தெரிவித்துள்ளார்.

சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தில் றோட்டறிக் கழகத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்திலே நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகள் எதுவானாலும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே அவற்றில் அதிகளவில் வெற்றி பெறுகின்றனர். அது இப்பிரதேசத்திற்குக் கிடைத்துள்ள பெரிய கௌரவமாகும். அதுபோல கல்வியிலும் இப்பிரதேச மாணவர்கள் சிறப்பாகச் செயற்பட்டு முன்னிலைக்குவர வேண்டும். அதற்கு நாம் எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளோம் என்றார். (54)

# ஒரே பிரசவத்தில் 3 ஆண் குழந்தைகள்

## காரைநகர் தாய் சாதனை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் தாய் ஒருவர் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். யாழ்ப்பாணம் திருச்சிலுவைக் கன்னியர் வைத்தியசாலையில் இக்குழந்தைகள் பிறந்துள்ளன. காரைநகரைச் சேர்ந்த இப்பெண்ணின் குடும்பம் தற்போது யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதியில் வசிக்கின்றது.

தாயும், குழந்தைகளும் நலமாக உள்ளார்கள். இவர்கள் வைத்தியசாலை வட்டாரங்களினால் மிகவும் அக்கறையுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இக்குழந்தைகளைப் பார்வையிட வருவதற்கு பலர் சென்று வருவதுடன் பரிசுப் பொருட்களையும் வழங்கி வருகின்றனர். (137)

# மணிக்கூட்டு சுற்று வட்டத்திற்கு எப்போது காப்பெற்

(குருநகர்)

யாழ்.மணிக்கூட்டு வீதியின் ஒரு பகுதி 'காப்பெற்' போட்டுச் செப்பனிடப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி வீதியில் இருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரையான பகுதியே 'காப்பெற்' வீதியாக்கபட்டுள்ளது.

அதேவேளை, மணிக்கூட்டுச் சுற்றுவட்டம், பொதுசன நூலகப் பகுதி மற்றும் புல்லுக்குளப் பகுதி வீதிகளும் இன்னமும் 'காப்பெற்' போடப்படவில்லை. மணிக் கூட்டுக்கோபுரம் வரையான வேம்படி வீதி ஏற்கனவே 'காப்பெற்' போடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

காப்பெற் போடும்பணி பூரணமானால் யாழ்.பொலிஸ் நிலையம் மற்றும் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, நீதி மன்றம், நூலகம் போன்றவற்றுக்குச் சென்று மீள்வோர் பயனடைவரெனத் தெரிவிக்கப்படுகிறது. (68)

# பாண்டியன் குளம் பிரதே செயலகத்தில் இன்று நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன் குளம் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள மக்களுக்காக பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று நடமாடும் சேவை ஒன்று இடம் பெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல், காலம் தாழ்ந்த பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல் பொலிஸ் பதிவு உத்தேச வயது சான்றிதழ் மற்றும் கடவுச் சீட்டு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இதில் இடம் பெறவுள்ளன.

காலை 9 மணி முதல் பாண்டியன்குளம் பிரதேச செயலகத்தில் இந்த நடமாடும் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த பாண்டியன்குளம் பிரதேச செயலகப்பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்கள் இதன் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எச்சரிக்கையை மீறியோர் சட்டத்தின் பிடியில்




(திருநெல்வேலி)

வீதியில் குப்பை கொட்டிய மூவர் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் பெண்களாவர். யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இம்மூவரும் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

கொக்குவில்-ஆடியபாதம் வீதியில் அம்மன் கோவிலுக்குப் போகும் முகப்பில் குப்பைகள் கொட்ட வேண்டாம் என நல்லூர் பிரதேச சபையினால் அறிவித்தல் பலகை போடப்பட்டிருந்த இடத்தில் குப்பை கொட்டியவர்களே பொலிஸாரால் பிடிக்கப்பட்டவர்களாவர்.

குப்பைகளைக் கொட்டுவதற்காக நல்லூர் பிரதேச சபையினால் சில இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இவ்விடங்களில் குப்பைகளுடன் நாய் மற்றும் கோழிகள் போன்றவற்றின் எச்சங்களும் கொட்டப்பட்டு இவ்விடங்கள் சுகாதாரச் சீரழிவுடன் காணப்பட்டமையினால் மேற்படி இடங்களில் குப்பை கொட்டப்பட வேண்டாம் என அறிவித்தல் பலகைகள் நாட்டப்பட்டிருந்தன.

இதையும் மீறி இவ்விடத்தில் குப்பை கொட்டியவர்களே நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர். இந்நடவடிக்கை தொடரும் எனவும், வீதிகளில் குப்பை கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட இடங்களில் குப்பை கொட்ட வேண்டாம் என அறிவித்தல் பலகைகள் நாட்டப்பட வேண்டும் எனவும், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தினமுரசு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (137)

# "எனது உலகு" புகைப்படக் கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய சிறுவர்கள் தாம் வாழும் சூழலைப் புகைப்படங்கள் ஊடாக வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தும் "எனது உலகு" எனும் சிறுவர்களின் புகைப்படக் கண்காட்சி இன்றும் நாளையும், நாளைமறு தினமம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணி தொடக்கம் 2 மணிவரை மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்திலும் நாளையும், நாளைமறுதினமும் காலை 9.30 மணி தொடக்கம் 5 மணிவரை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்திலும் இடம்பெறவுள்ளது.

# முஸ்லிம் மக்களுக்காக சமூக பாதுகாப்புச் சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் பிரதேசத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல் நிர்வாகிகளும், உலமாக்களும், பொது மக்களும் யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் எம்.எம்.நிலாம் தலைமையில் மஸ்ர உத்தீன் பாடசாலையில் ஒன்றுகூடி சமூகப் பாதுகாப்பு சபையை உருவாக்கியுள்ளார்கள்.

இக்கூட்டத்தில் உலமாக்களான மௌலவி ம:.முது, மௌலவி றொசான், இஸ்லாமிய மார்க்க சட்ட விளக்கங்களைத் தெளிவுபடுத்தினார்கள். அஷ்சேஷ்க் அஸ்மின் ஜயூப், எம்.யூ.எம்.தாஹிர், எம்.ஏ.ஸி. மூபீன், எஸ்.எம்.ஜுனூஸ் (கிராம அலுவலர் J/86) மற்றும் உறுப்பினர்களும் சபையின் எதிர்கால நடவடிக்கை பற்றி விளக்கம் அளித்தனர்.

தற்போது யாழ்ப்பாணத் தைப் பீடித்துள்ள கலாசார சீர ழிவுகள் முஸ்லிம் பகுதிகளிலும் ஊடுருவியுள்ளன. விபசாரம், மதுபாவனை, போதைவஸ்து விற்பனை நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

முக்கியமாக விபசாரத்தில் ஈடுபடுபவர்கள் அதிகரித்து வருவதைத தடுப்பதற்காக இச்சபை சக்தி மிக்க குழுவை உருவாக்கியுள்ளது.

யாழிலுள்ள அனைத்துப் பள்ளிவாசல் நிர்வாகத்திலுள்ள மஹல்லாவாசிகள் அவ்வப் பகுதி பள்ளி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். பள்ளி நிர்வாகம் விபசாரத்தில் ஈடுபடுபவர்களை விசாரித்து தீர்ப்பு வழங்க முடியாத போது சபை விசாரணை செய்து தீர்வை மேற்கொள்ளும்.

சக்திமிக்க இச்சபையின் செயற்பாடுகள் பற்றிய விளக்கங்களை அரச அதிபர், பிரதேச செயலாளர், பொலிஸ் தலைமை அதிகாரி மற்றும் கிராம அலுவலர்களுக்கும் தெரியப்படுத்தி, இவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தும் நோக்கம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சமூகவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களை எச்சரித்து எழுத்து மூலமான அறிவித்தல் கொடுத்தல், திருந்தி வாழாதவர்களை பிரதேசத்தைவிட்டு வெளியேற்றுதல் எனச் சபையில் அனைவரும் தீர்மானித்துள்ளார்கள். (105)

# மாணவர்களின் சிந்தனை ஆற்றலுக்கு ஆசிரியர்கள் மதிப்பளிக்க வேண்டும்



(யாழ்நிருபர்)

மாணவரின் சிந்தனை ஆற்றலுக்கு மதிப்பளிக்கும் பண்பை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ளவேணடும். இதன் மூலமே புத்துயிர்ப்புடைய சமூகம் ஒன்றை உருவாகக முடியும். ஆசிரியர் சமூகத்தினரிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தவல்ல இலக்கியங்கள் நம்மண்ணில் படைக்கப்பட வேணடும் எனத் தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்.

நெடுந்தீவு மகேஷ் எழுதிய 'தாரணி ஓர் ஆச்சரியக்குறி' என்ற சிறுகதை நூலின் வெளியீட்டு விழா ஆறுதல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது சிறுகதை நூலுக்கான ஆய்வுரை மேற்கொள்ளும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விமர்சனம் செய்பவர்களை அந்தப்புரத்து அலிகள் என்று படைப்பாளிகள் குறிப்பிடுகின்றனர். அது ஒருவகையில் நியாயமானதே. எங்களால் அந்த இலக்கியங்களைப் படைக்க முடிவதில்லை. ஆனால் அந்த இலக்கியம் எப்படி இருக்க வேண்டுமென எடைபோட முடிகிறது.

ஆசிரியர்கள் மத்தியில் மனப்பாங்கு மாற்றம்கட்டி எழுப்பப்பட வேண்டும். வகுப்பறையில் வித்தியாசமான கோணத்தில் சிந்திக்கின்ற பிள்ளையை ஆசிரியர்கள் தட்டிக் கொடுப்பதில்லை. மாறாக தண்டனை கொடுக்கவே முனைகின்றனர். ஆனால் வித்தியாசமான சிந்தனை ஓட்டமுள்ள மாணவர்களே செயற்கரிய செய்யக்கூடிய சாதனையாளர்களாக உருவாகின்றனர் என்றார். (10)

# வதிவிடச் செயலமர்வு

(பருத்தித்துறை)

க.பொ.த.சாதாரணதரப் பெறுபேறுகளின் அடிப்படையில் தாழ்வினைத் திறன் உடைய பாடசாலைகளில் முகாமைத்துவத்தை வலுவூட்டும் வதிவிடத் தலைமைத்துவச் செயலமர்வு ஒன்று பாடசாலை அதிபர்களுக்கும், கோட்டக் கல்வி அலுவலர்களுக்கும் இன்று காலை 8.30 முதல் நாளை 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மருதனார்மடத்தில் உள்ள இறையியல் கல்லூரியில் நடைபெறவுள்ள இச்செயலமர்வுக்கு சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (109)

# மாணவர்களின் பாடசாலை வரவை பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும்

## – அதிபர் சண்முககுமார்

(யாழ்.நிருபர்)

பாடசாலைக்கு எண்பது சத வீத வரவு இல்லாத மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றினைப் பெற மாட்டார்கள். எனவே பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரணதர மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவது தொடர்பாக நடைபெற்ற அனைத்துப் பெற்றோர் ஆசிரிய ஒன்றுகூடல் நிகழ்விற்குத் தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் சு.சண்முககுமார் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி நிலையில் வீழ்ச்சிப்போக்கு காணப்படுகின்றது. கடந்த வாரம் எங்கள் பாடசாலைக்கு வருகை தந்த வலயக் கல்விப்பணிப்பாளர் க.பொ.த சாதாரணதர வகுப்புகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு அவர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவது தொடர்பாக ஆலோசனை வழங்கிச் சென்றுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் எமது பாடசாலையில் இருந்து 49 மாணவர்கள் தோன்றி 16 பேர் ஆறு பாடங்களிலும் சித்தி பெற்று உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். இதில் வேதனையான விடயம் என்னவெனில் 5 பாடங்களில் சித்தி பெற்று 6 ஆவது பாடத்தில் சித்தி பெறத்தவறியதால் 26 மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு அனுமதி பெறும் தகைமையை இழந்திருக்கின்றார்கள். இவர்களும் 6 பாடங்களில் சித்தி பெற்றிருந்தால் எமது பாடசாலை சித்தி வீதம் 78.4 ஆக அதிகரித்து முன்னணிக்கு வந்திருக்கும்.

எதிர் காலத்திலும் இந்த நிலை தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க முடியாது. பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் வரவினைப் பெற்றோர் கவனிக்க வேண்டும்.

மாணவர்கள் ஒழுங்காக பாடசாலைக்கு வருபவர்களாயின் அவர்கள் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக் கொள்ள முடியும் என்றார். (10)


# "உயிர்ச்சமர்" விமர்சன ஆய்வரங்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியகுவியத்தால் நீராவியடி சைவபரிபாலன சபையில் குறஜீபனின் நகுநயம் மன்றத்தினால் கே.எஸ்.ராஜ் இன் உயிர்ச்சமர் கவிதை நூல்கள் மீதான விமர்சன ஆய்வரங்கு இலக்கிய குவியத்தின் தலைவர் வேலணையூர் தாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிறைநிலா, மாதங்கி, மதிவதனி, மதிகரன், வினோத், ஆழியூர் ரதீஸ், கிரிசாந், சுமணன் ஆகியோர் விமர்சன உரையாற்றினர். நூலாசிரியர் குறஜீபன், ஜே.எஸ்.ராஜ் ஆகியோர் பதிலுரைகளை நிகழ்த்தினர்.



வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத் திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (01)

# வாழைத்தோட்ட உரிமையாளர்கள் நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

அண்மையில் வீசிய காற்றினால் பெருமளவான வாழைகள் முறிந்து நாசமாகியுள்ளன. இதனால் வாழை உற்பத்தியாளர்கள் பலத்த நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

குறிப்பாக அதிகளவில் வாழைச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் நீர்வேலிப் பகுதியிலேயே இவ்விழப்பு பெருமளவு ஏற்பட்டிருக்கின்றது. இப்பகுதியில் முறிந்த வாழைகள் பழுத்த நிலையில் தோட்டங்களிலும் வீதியோரங்களிலும் காணப்படுகின்றது. இந்தக் காற்றினால் பெருமளவு வாழைகள் முறிவடைந்துள்ளன. இதனால் பொருளாதார ரீதியாக அந்த விவசாயிகள் கடும் தாக்கத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

வாழை உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இவ் விழப்பிற்கான நஷ்டஈடு பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை என வாழைத் தோட்டக்காரர்கள் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். பலர் இவ்வாழைகளை நம்பியே தமது அன்றாட சீவியத்தை நடாத்த வேண்டிய நிலையில் உள்ளவர்கள். காற்றினால் இவ் வாழைகள் முறிந்து அழிந்து போயுள்ளதால் வாழை உற்பத்தியாளர்கள் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளார்கள். கதலி, இரதை, கப்பல், மொந்தன், யானை என பல்வகையான வாழைகள் முற்றாக அழிவடைந்துள்ளன. வாழை அழிவுகளால் எதிர்வரும் சில மாதங்களில் வாழைப் பழத்தின் விலை சடுதியாக அதிகரிக் கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வாழைக் குலைகளுக்கான தட்டுப்பாடும் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க் கப்படுகின்றது.

எரிபொருளுக்கும், உரவகைகளுக்கும் பெருமளவு நிதியை செலவு செய்ததுடன் தமது நகைகளையும் வங்கிகளில் அடைவுவைத்து பலர் இந்த உற்பத்தியை மேற்கொண்டிருந்த தாகவும் பாதிக்கப்பட்ட இந்த உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (137)

## விவசாய அலுவலகத்தில் பொலிஸ் நிலையம்

(மாங்குளம்)

மாங்குளம் பெரும் பகுதிக் குட்பட்ட பொலிஸ் நிலையம் ஒன்று கனகராயன் குளப்பகுதியில் இயங்குகிறது. இப்பகுதியில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் பொலிஸ் நிலையமானது விவசாய அலுவலகத்தில் இயங்குகிறது.

இதனால் விவசாய அலுவலகம் வசதியற்ற சிறிய கூடத்தில் இயங்குவதனால், அதன் பயனிகள் பயன் பெறுவதில் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர். (12)

# இலட்சார்ச்சனை

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு கத்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில் (காளி கோவில்) இலட்சார்ச்சனை இன்று முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று முதல் தினமும் பிற் பகல் 2.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூசை, வசந்தமண்டப பூசைகளில் விநாயகப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகி நடைபெறும்.

இறுதி நாளான எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து கணபதி ஹோமம் பூர்ணாகுதி ஆசீர்வாதமும் அருட்பிரசாதம் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன.

# முரசின் இன்றைய பலன்

(15.05.2012 -செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 02 ஆம் திகதி. நசமி முன்இரவு 9.26 வரை.
நட்சத்திரம் பூரட்டாதி. மரணயோகம் பின்னிரவு 1.33 வரை.
இராகுகாலம் 2.53 - 4.23 வரை. சுபநேரம் 10.23 - 11.53 வரை.
எமகண்டம் 8.53 - 10.23 வரை. குளிகைகாலம் 11.53 - 1.23 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இலாபதினம், மறுமணவாய்ப்புக்கு இடமுண்டு, வெளிநாடு செல்லும்வாய்ப்பு, பதவியுயர்வு. |
| ரிஷபம் | மனதில் உற்சாகம், மனச்சஞ்சலம் அகலும், பண வரவு, மறைமுக வருவாய் கவனம். |
| மிதுனம் | சுபகாரியங்கள், வியாபாரத்தில் மாற்றம், நினைத்தது நிறைவேறும், இடமாற்றம் வரும். |
| கடகம் | பயண வெற்றி, முட்டுக்கட்டைகள் விலகும், எதிரிகள் விலகுவர், குடும்பத்தில் ஒற்றுமை. |
| சிம்மம் | உள சௌகரியம், தடைகள் அகலும், சுபகாரியங்கள் நிறைவேறும், கொடுக்கல் வாங்கல். |
| கன்னி | கடன் தொல்லை, அதிகாரிகளை அனுசரிக்கவும், அரச உதவிகள், சகோதரரால் நன்மை. |
| துலாம் | பாராட்டுக்கள், பேச்சில் நிதானம் வேண்டும், மன உழைச்சல், நினைத்தது நிறைவேறும். |
| விருச்சிகம் | வாகனச்சிறப்பு, திருமணத்தில் தடைவரலாம், வேலைப்பளு அதிகரிக்கும், கல்வியில் கவனம். |
| தனுசு | அன்னியர் சகாயம், புத்திரர் வழியில் மகிழ்ச்சி, கடன்கள் வசூல், தொழிலாளர் ஒத்துழைப்பு. |
| மகரம் | வாழ்வில் சந்தோஷம், தொழில் வளம் பெருகும், திருமணப்பேச்சில் முன்னேற்றம். |
| கும்பம் | வாக்குப் பலிதம், பொன்பொருள் சேரும், தகுதி உயர்வு பெறும், உற்சாக வாழ்க்கை. |
| மீனம் | புதுக் குழப்பம், வேலைப்பளு அதிகரிக்கும், உடல் நல எச்சரிக்கை, பிரச்சினை தீரும். |

# யுத்தத்தில் சேதமடைந்த ஆலயங்கள் புனரமைப்பு செய்யப்படவில்லை

## – ஆறு.திருமுகன் கவலை

(திருநெல்வேலி)

கடந்தகாலயுத்தத்தின் போது பல இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டன. சில கோவில்கள் கோபுரத்தோடு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அவை எதுவும் புனரமைப்பு செய்யப்பட்டு மீள் நிர்மாணம் செய்யப்படவில்லை என செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இந்து ஆலயங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரைநிகழ்த்தும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு வரும் அரச தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் நல்லை ஆதினக் குருவை அவரது மட்டத்திற்கு சென்று வணங்கி ஆசிபெற வேண்டுமேயொழிய தாம் இருக்கும் இடத்திற்கு அவரை வரவழைப்பது பொருத்தமானதல்ல. இந்து மதத்திற்கு உரிய மரியாதை செலுத்தப்படல் வேண்டும்.

பல்லாண்டுகள் பூசைகள் எதுவுமின்றி இருந்த கீரிமலை நகுலேஸ்வர ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெற்றது மகிழ்ச்சி தருவதாகும். என்றார்.

இந்து மாமன்ற செயலாளர் கநீலகண்டன், நல்லை ஆதீன முதல்வர், தொழிலதிபர் எஸ்.பி.சாமி மற்றும் மன்னார், பூநகரி, கிளிநொச்சி, வன்னி போன்ற இடங்களிலிருந்து வந்திருந்த ஆலய அறங்காவலர்கள், நிர்வாகிகள் ஆகியோரும் உரையாற்றினர். (137)



# செரீனா, பெடரர் சம்பியன்

(மாட்ரிட்)

மாட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடர் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் பெடரரும், பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற மாட்ரிட் ஓப்பன் டென்னிஸ் தொடர் நடந்தது. மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில், முதல் நிலை வீராங்கனையான பெலாரசின் விக்டோரியா அஸரென்கா, அமெரிக்காவின் செரீனா வில்லியம்சை எதிர்த்து விளையாடினார். தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய செரீனாவுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அஸரென்கா திணறினார். இதனால், முதல் செட்டை 6,1 என்ற கணக்கில் எளிதாக வென்ற செரீனா 2ஆவது செட்டிலும் 6,3 என கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் இறுதியில் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரும், செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சும் மோதினர். இதில் முதல் செட்டை இழந்து பெடரர் தடுமாறினார். இருப்பினும் பின்னர் சுதாகரித்து கொண்ட பெடரர் இறுதியில் 3-6, 7-5, 7-5 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். இதேவேளை, இவ்வெற்றியின் மூலம் தரப்படுத்தலில் பெடரர் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டத்தை கலைக்க அதிர்வுத் தொழில்நுட்பம்

(லண்டன்)

எதிர்வரும் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஒலி அலைகள் மூலமான அதிர்வுகளின் மூலமாக கூட்டத்தை கலைக்கும் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை தற்போது, பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இந்த வகையிலான கருவி நெடுந்தூரத்திற்கு ஒலி அலைகளை வெளியிடும் தகைமைகளைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இந்த வகையிலான கருவி ஏற்கனவே சர்வதேச ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறும்பொழுது, தேம்ஸ் நதியின் ஊடாக எந்தவகையிலுமான கப்பல்கள் வராமல் தடுப்பதற்கான இலகு .முறைமையினை இந்தக் கருவி மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, லண்டன் ஒலிம்பிக்கிற்கான பாதுகாப்பான முறைமைகளை உறுதி செய்யும் பல்வேறு முன்னேற்பாட்டு முறைமைகளில் இதுவும் ஒன்று என பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் இரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து டெஸ்ட் அணி அறிவிப்பு

(லண்டன்)

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டிக்கான டெஸ்ட் அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் இடம்பெறுவார் எனப்பெரிதும் எதிர்பார்க்கப்பட்டிருந்த மத்தியவரிசைத் துடுப்பாட்ட ரவி போப்பாரா இடம்பெற்றிருக்கவில்லை. இங்கிலாந்தின் பிராந்தியப் போட்டிகளில் காயமடைந்ததன் காரணமாகவே அவர் அணியில் இடம்பெற்றிருக்கவில்லை. ஏற்கனவே அணியில் இடம்பெறுவதும், வெளியே செல்வதுமாகக் காணப்பட்ட ரவி போப்பாராவின் டெஸ்ட் வாழ்க்கையின் மற்றுமொரு பின்னடைவாக இது கருதப்படுகிறது.

காயமடைந்துள்ள ரவி போப்பாராவிற்குப் பதிலாக விக்கெட் காப்பில் ஈடுபடும் துடுப்பாட்ட வீரரான ஜோனி பெய்ர்ஸ்ரோ இடம்பெற்றுள்ளார். மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரராகக் கணிக்கப்படும் ஜோனி பெய்ர்ஸ்ரோ, மேற்கிந்தியத் தீவுகள்அணிக்கும் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்குமிடையில் இடம்பெற்று வரும் பயிற்சிப் போட்டியிலும் சிறப்பாக ஆடி அரைச்சதத்தினைப் பெற்றிருந்தார்.

ஏற்கனவே இங்கிலாந்து அணி சார்பாக தலா 6 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் ருவென்ரி 20 போட்டிகளில் அவர் பங்குபற்றியிருந்தார்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

அன்ட்ரூ ஸ்ட்ரோஸ், அலஸ்ரெயர் குக், ஜொனதன் ட்ரொட், கெவின் பீற்றர்சன், இயன் பெல், ஜோனி பெய்ர்ஸ்ரோ, மற் பிரயர், ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் ப்ரோட், கிரேம் ஸ்வான், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டீவன் ஃபின், கிரஹம் ஒனியன்ஸ்.

# சச்சின் கையெழுத்து துடுப்பு ஏலம்



(லண்டன்)

சச்சின் டெண்டுல்கர் கையெழுத்திட்ட துடுப்பை ஏலத்தில் விடுவதற்காக கொடுத்துள்ளார் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன்.

ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் கிரிக்கெட் மைதானம் அமைக்க நிதி திரட்டுவதற்காக, அந்த துடுப்பை ஏலத்தில் விட கொடுத்துவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தான் பாதுகாப்பாக வைத்திருந்த முக்கியப் பொருட்களில் சச்சினின் துடுப்பும் ஒன்று. 2010ஆம் ஆண்டில் இந்தியா வந்தபோது அந்த துடுப்பு எனக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஏலத்தில் அந்தத் துடுப்பு சுமார் 3 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனதாக டெய்லி டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# இடைக்கால பயிற்சியாளர்

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் ஷேர் ஜூர்கன்சன் அந்த அணியின் இடைக்காலப்பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்யும் வரை ஜூர்கன்சன் இடைக்காலப் பயிற்சியாளராக செயற்படுவார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஜூர்கன்சன் கடந்த ஆண்டு ஒக்டோபரில் பங்களாதேஷ் பந்துவீச்சு பயிற்சியாளராக நி–யமனம் பெற்றார். 36 வயதான இவர் முன்னாள் குவின்ஸ்லாந்து வேகப்பந்து வீச்சாளராவார். இந்நிலையில் பங்களோதேஷ் பயிற்சியாளரைத் தேடும்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பதவிக்கு தென்னாபிரிக்கரான ரிச்சட் பைப்பாஸ் தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பைப்பாஸ் கடந்த வெள்ளிக் கிழமை பங்களாதேஷ் சென்று அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் பயிற்சியாளர் பதவி குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

# சம்பள உயர்வு இல்லை

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கான இவ்வாண்டுக்கான புதிய ஒப்பந்தங்கள் அறிவிக்கப்படும் போது இலங்கை வீரர்களுக்கான ஊதியங்களில் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை எனத்தெரிகிறது. கடந்தாண்டு உலகக்கிண்ணத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணிக்கு, இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிதிநெருக்கடிகள் காரண-மாகவே சம்பள உயர்வு வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிதிப் பிரச்சினைகள் காரணமாக தொடர்ந்தும் இலங்கைக் கிரிக்கெட் சபை தடுமாறிவரும் நிலையில்,இலங்கைவீரர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. குறிப்பாக கடந்தாண்டு உலகக்கிண்ணத்தின் போது இரண்டாமிடத்தை இலங்கை பெற்றுக் கொண்டதன் காரண-மாக 1.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பரிசுத்தொகையைப் பெற்றுக் கொடுத்த நிலையில் இலங்கை அணிக்கான ஊதியத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவி வந்தது.

தற்போதைய நிலையில் வீரர்களுக்கான ஊதியத்தொகை அதிகரிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் எவையும் கிடையாது எனத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர், வீரர்களுடனான பேரம்பேசுதலின் போது அது சிலவேளைகளில் மாற்றமடையலாம் எனவும் தெரிவித்தார்.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலிருந்து இலங்கை வீரர்கள் நாட்டுக்குத் திரும்பியதும் ஒப்பந்தம் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அத்தோடு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த அளவை விட, குறைவான வீரர்களுக்கே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து பிறீமியர் லீக் மன்செஸ்டர் சிட்டி சம்பியன்

இங்கிலாந்து பிறீமியர் லீக் சம்பியனாக மன்செஸ்டர் சிட்டி கழகம் தெரிவாகியுள்ளது. நேற்று முன்தினம் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகத்திற்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் இரண்டு இறுதி நேரக் கோல்களின் காரணமாக அவ்வணி 3 – 2 என்ற வெற்றியைப் பெற்றுக்கொண்டதோடு, பிறீமியர் லீக் சம்பியன்களாகவும் மாறிக்கொண்டது. எத்திஹட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில், ஆட்டத்தின் பெரும்பான்மையான நேரத்தில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகம் முழு ஆதிக்கத்தைக் கொண்டிருந்த போதும் போட்டி முடிவடையும் நேரத்தில் அவ்வணி பெற்றுக்கொண்ட இரண்டு கோல்கள் போட்டியை மாத்திரமன்றி, சம்பியன் பட்டத்தையும் அவர்கள் வசம் கொண்டு சேர்த்தது.

போட்டி ஆரம்பித்த 39 நிமிடங்களில் போட்டியின் முதற் கோலாக மன்செஸ்டர் சிட்டி சார்பாக சூபலெட்டா அடித்த கோல் மாறிக்கொள்ள மன்செஸ்டர் சிட்டிக் கழகம் முதற்பாதியில் 1 – 0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. எனினும் இரண்டாம் பாதியில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகம் சார்பாக இரண்டு கோல்கள் குறைந்த நேர இடைவெளியில் அடிக்கப்பட்டன.

போட்டியின் 48ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்கப்பட கோல் எண்ணிக்கை 1 – 1 என்ற கணக்கில் சமப்படுத்தப்பட்டது. எனினும் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியின் தலைவர் ஜோய் பார்ட்டன் மன்செஸ்டர் சிட்டியின் கார்லொஸ் ரெவெஸ்ஸை முழங்கையால் தாக்கியதன் காரணமாக சிவப்பு அட்டை காட்டி 55ஆவது நிமிடத்தில் வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர் மன்செஸ்டர் சிட்டி கழகம் 10 பேர் கொண்ட குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியை சற்று இலகுவாக எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 10 பேர் கொண்ட குயீன்ஸ் ரேஞ்சர்ஸ் கழகம் மேலும் தீர்மானம்மிக்கதாக ஆடி போட்டியின் 66ஆவது நிமிடத்தில் மேலும் கோலொன்றை அடித்து 2 – 1 என்ற முன்னிலையைப் பெற்றது. அதன் பின்னர் இரு அணிகளும் தொடர்ந்தும் கோல்களைப் பெற முயற்சித்த போதிலும் கோல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. எனினும் போட்டி முடிவடையும் தருணத்தில் மன்செஸ்டர் சிட்டி சார்பாக ஷேக்கோ கோலொன்றை அடிக்க மன்செஸ்டர் சிட்டியின் சார்பில் நம்பிக்கை பிறந்தது. அடுத்து 94ஆவது நிமிடத்தில் அகுரோ கோலொன்றை அடித்து மன்செஸ்டர் சிட்டிக் கழகத்திற்கு பீறிமியர் லீக் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தார்.




# உறவு புதுப்பிக்கப்படும்

(லாகூர்)

இம்முறை இந்திய சம்பியன் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் பின்னர் இந்தியாவுடனான இரு தரப்பு கிரிக்கெட் உறவுகள் புதுப்பிக்கப்படும் என பாகிஸ்தான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சம்பியன் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கென அணியொன்றை அனுப்புமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இந்த முடிவு குறித்து மகிழ்ச்சியடைவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவனத்தின் சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி ஷப்ஹான் அஹமட் கூறியுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் உறவுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான முதல் படியாக இது அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் காரணமாக இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு சம்பியன் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கான அழைப்பினை இந்தியா விடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப் வெற்றி

டெக்கான் சர்ஜர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜஸ் அணி 20 ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் தவான் 71 ஓட்டங்களைப் பெற்றதுடன், கமரூன் வைட் ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் அசார் மொஹமூட் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். பதிலுக்கு 191ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 194 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் டேவிட் ஹசி 35 பந்துகளில் 65 ஓட்டங்களைப் பெற்றதுடன், அசார் மொஹமூட் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் டானியல் கிறிஸ்டியன் மற்றும் டேல் ஸ்டேன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டகாரராக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணித் தலைவர் டேவிட் ஹசி தெரிவுசெய்யப்பட்டார்.

## ஹொக்கிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டித் தொடர் ஒன்றை யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தவுள்ளது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தப்படவுள்ள இப்போட்டித் தொடர் இம்மாத நடுப்பகுதியில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகளை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் சு.உதயனிடமோ அல்லது ஹொக்கிச் சங்கச் செயலாளர் ப. தர்மகுமாரனிடமோ தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (20)

## மாவட்ட மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் முதல் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் 11, 13, 15, 17, 19, 21 வயது ஆண், பெண்களுக்கான சுவட்டு நிகழ்வு மற்றும் ஓட்டம் போன்ற பல மெய்வல்லுநர் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகைதந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது இப்போட்டி தொடரின் இறுதி நாள் நிகழ்வு 18ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# பிரதேச செயலக ஹொக்கி சம்பியனானது உடுவில்



படப்பிடிப்பு : சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த சாயிராம் ஒரு கோலை பெற்றுக் கொடுத்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இதேவேளை, உடுவில் பிரதேச செயலக அணியின் வீரர் மதனகோபி ஒரு கோலை பெற்றுக் கொடுத்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் பிரதேச செயலக அணி 2 : 0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (20)

## விளையாட்டுச் செய்திகள்

## கூடைப்பந்தாட்டம்

(உடுவில்)

உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டுப் பிரிவினரால் பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்படவுள்ள எலைசா அக்னியூ வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள பாடசாலை அணிகளை உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஷிராணி மில்ஸ் சிடனோ அல்லது உடற்கல்வி ஆசிரியர் ப. தர்மகுமாரனிடமோ தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (20)

# முல்லை பூப்பந்தாட்டம் வவுனியாவில் இன்று

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட பூப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் உள்ளக விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

15 வயதுப் பிரிவு ஆண், பெண், 19 வயதுப் பிரிவு ஆண்கள் என இருபாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டி 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. இரண்டாவது போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி எதிர் வல்லிபுனம் உயர்தரப் பாடசாலை. மூன்றாவது போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரி எதிர் 1ஆவது போட்டியில் வெற்றி பெறும் அணி. நான்காவது போட்டி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இடம்பெறும்.

19 வயதுப் பிரிவு ஆண்கள்:

முதலாவது போட்டி வித்தியானந்தாக் கல்லூரி எதிர் யோகபுரம் மகா வித்தியாலயம், இரண்டாவது போட்டி - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் மல்லாவி மத்திய கல்லூரி. மூன்றாவது போட்டி வன்னிவிளாங்குளம் தமிழ் வித்தியாலயம் எதிர் முதலாவது போட்டியில் வெற்றி பெறும் அணி. நான்காவது போட்டி செம்மலை மகாவித்தியாலயம் எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

15 வயதுப் பிரிவு பெண்கள்:

முதலாவது போட்டி வன்னிவிளாங்குளம் தமிழ் வித்தியாலயம் எதிர் சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை, இரண்டாவது போட்டி மல்லாவி மத்திய கல்லூரி எதிர் பாரதி வித்தியாலயம், மூன்றாவது போட்டி வித்தியானந்தாக் கல்லூரி எதிர் முதலாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. நான்காவது போட்டி பாலிநகர் மகா வித்தியாலயம் எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றி பெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இடம்பெறும்.

19 வயதுப் பிரிவு பெண்கள்:

முதலாவது போட்டி வற்றாப்பளை மகாவித்தியாலயம் எதிர் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், இரண்டாவது போட்டி - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் மாங்குளம் மகாவித்தியாலயம், மூன்றாவது போட்டி ஒலுமடு தமிழ் வித்தியாலயம் எதிர் முதலாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. நான்காவது போட்டி வித்தியானந்தாக் கல்லூரி எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இடம் பெறும்.

இப்போட்டித் தொடரில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக்கொள்ளும் அணிகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (42)

# செம்மலை ம.வி. மாவட்ட சம்பியன்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான மாவட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலயம் சம்பியனானது.

இப்போட்டி கடந்த 11ஆம் திகதி மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் உடையார்கட்டு மகா வித்தியாலய அணியும், கற்சிலைமடு அ.த.க.பாடசாலை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டமையால் இரு அணிகளாலும் எவ்வித கோல்களையும் பெறமுடியவில்லை. இதனால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலய அணியும், பாலிநகர் மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இப்போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற செம்மலை மகாவித்தியாலய அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

இறுதிப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலய அணியும் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டமையால் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற செம்மலை மகாவித்தியாலய அணி மாவட்ட சம்பியனானது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் உடையார்கட்டு மகாவித்தியாலய அணியும், பாலிநகர் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய உடையார்கட்டு மகாவித்தியாலய அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (42)





மட்டக்களப்பு மாநகர சபை கால்பந்தாட்ட அணிக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை கால்பந்தாட்ட அணிக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் 1-1 என்ற கோல் அடிப்படையில் போட்டி சம நிலையில் முடிவடைந்தது. இப்போட்டி நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன் மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. இரு அணித் தலைவர்களிடமிரும் வெற்றிக் கிண்ணத்தை யாழ். மாநகர் முதல்வர் யோகேஸ்வரி பங்குணராசா வழங்குவதையும், போட்டியில் பங்குபற்றி வீரர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம்.

**கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த 09.05.2012 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் ஆற்றிய உரை.**

# மாணவர்களின் கல்விசார் தோல்விகள்: யார் பொறுப்பாளிகள்?

**இலங்கையில்** பாடசாலை முறைமை "சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற்திறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை வழங்கத் தவறிவிட்டது. ஆக்கத்திறன், சுயதூண்டல், ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை என்பனவும் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களில் ஏற்படுத்தவில்லை. (பொதுக் கல்விச் சீர்திருத்தங்கள் 1997 பக்கம் 01) என்று ஒன்றரை தசாப்த காலத்திற்கு முன்பே கருதப்பட்டது. எனினும் இன்று வரை பெரிய முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

சோதனைகள் பாடசாலை முறைமையின் செயலாற்ற குறிகாட்டிகளாக இப்போதும் உயர் மதிப்பு பெற்றுள்ளன. அவை கூட தோல்விகளையே தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன.

ஐந்தாம் தரத்திலுள்ள பிள்ளைகளில் ஐந்தில் ஒரு பங்கினர் மாத்திரம் எழுத்தில் அடைய வேண்டிய திறமை நிலையை அடைந்தவராயும் அதற்கு குறைந்த பங்கினரே கணிதத்திலும் சுகாதாரக் கல்வியிலும் அம்மட்டங்களை அடைந்தவராகவும் காணப்படுகின்றனர். க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் (1995இல்) பத்திலொரு பங்கினர் எட்டுப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர். கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் பதினொன்றில் ஒரு பங்கினர் நான்கு பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர். (பொதுக் கல்விச் சீர்திருத்தங்கள் 1997 பக்கம் 01)

2002இல் 245,000 பிள்ளைகள் பரீட்சைக்குத் தோற்றினர்கள். மாவட்ட அடிப்படையில் 25,000 பேர் சித்தி பெற்றனர். க.பொ.த. (சாதாரண) பரீட்சைகளில் சராசரி 50 வீதமானோரே சித்தியடைந்து வருகின்றனர். க.பொ.த. (உயர் தரப்) பரீட்சைகளில் சித்தி பெறுவோரில் 17 வீதமானோரே பல்கலைக்கழகம் நுழைகின்றனர்.

எமது பாடசாலை முறைமையின் தோல்வி என்பது தேசிய வளவிரயங்களுடன் தொடர்புடையது. தேசிய நிதியும், கல்வி கற்ற மனித வளமும் விரயமாதல் சோதனைத் தோல்விகளுடன் செறிவாக பிணைக்கப்பட்டுள்ளன. எமது பிரதேசங்களின் கல்வி மேம்பாடு தொடர்பான சிந்தனைகளைப் பரிசீலிக்கும் பின்னணியில் சோதனை சார்ந்த மாணவர் தோல்வி பற்றி கவனம் செலுத்துவதே இந்த விரிவுரையின் இலக்கும் நோக்கமுமாகும்.

### பரீட்சை முறையிலான தோல்வியின் பின்புலம் யாது?

பாடசாலை முறைமை தோற்றுப்போவதான உணர்வு மேல் எழுந்து வருகின்றது. கல்வி முன்னேற்றத்திற்கான மரபு வழி அளவுகோலாக பரீட்சைப் பெறுபேறுகள் குடியேற்றவாத காலத்திலிருந்து அங்கீகாரம் பெற்றுள்ளன. உலக ரீதியில் கல்வி வெளியீடு மற்றும் விளைவு தொடர்பான பல புதிய அணுகுமுறைகள் விருத்தி பெற்றுள்ள போதிலும் பழையதிலிருந்து புதியதனுள் நுழைவதிலும் பல இடர்பாடுகள் தேசிய ரீதியாக உணரப்பட்டுள்ளன.

அரசாங்கமே பாடசாலைக் கல்வியை வழங்கும் தேசிய தந்தையாகவும், ஒப்புவமையற்ற நிதிசார் வள்ளலாகவும் ஒருமுக கண்காணிப்பாளராகவும் தொடர்ந்து இருந்து வருவதன் விளைவாகவும் பாடசாலைக் கல்வி பற்றிய தோல்வியை பார்க்க முடியும். சில சமயங்களில் புள்ளிகளின் தாழ் எல்லைகளை மாற்றியமைக்கும் தேசிய மதிப்பீட்டுக் கொள்கைகளினால் உண்மையான அடைவு நிலைத் தோல்வியின் வீழ்ச்சியினை நாம் உணரத் தவறியுள்ளோம். எல்லா வருடங்களிலும் சித்திக்குரிய தாழ் புள்ளிகளையும் வினாத்தாள் தரமும் ஒரே மாதிரியில் பேணப்படுவதில்லை என்பதை இங்கு தொடர்புபடுத்திப் பார்ப்பது நன்று.

ஆசியாவுக்கான பாட சித்தித் தரம் என்பதும் உலக ரீதியான பாட சித்தித் தரம் என்பதும் தேசிய ரீதியான வருடாந்த சித்திக்குரிய தரங்கள் மற்றும் புள்ளி வீச்சுக்களுடன் உடன்படுகின்றனவா? என்பதும் தோல்வி பற்றிய உண்மைக் கணிப்புக்கு அவசியமாகின்றது.

தேசிய ரீதியான பாடத்திட்டம், தேசிய ரீதியான பாடசாலை ஏற்பாடுகள், தேசிய ரீதியான ஆசிரியை பயிற்சிகள் என்பன பிரதேச ரீதியிலும், குடிசன மற்றும் குடும்ப ரீதியிலும் கல்வியை பாதிக்கச் செய்யும் காரணிகளிடையில் ஒத்த நிலைமைகளே நிலவுவது போன்ற பொய்மையை தேசிய ரீதியில் அங்கீகரித்திருப்பது போன்ற உணர்வையே ஏற்படுத்துகின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களாக பிராந்தியங்களின், சமூக, பொருளாதார, தொழில்நுட்ப மாறுதல்கள் அதிகளவான ஏற்றத்தாழ்வுகளுடனேயே நிகழ்ந்துள்ளன. மேல் மாகாண மாற்றங்களுடன் ஊவா மாகாண அல்லது வடமாகாண மாற்றங்களை ஒப்பிடும் பொழுது எதிர்பாராத சிந்தனைச் சவால்களை நாம் எதிர்கொள்வோம்.




கற்பிப்பவராகவும் மதிப்பீட்டாளராகவும் அரசாங்கமே இருப்பதனால் பல சமயங்களில் கல்வி சாரா நியாயங்களை முன்னிறுத்தி அடைவு நிலைத் தரங்கள் தொடர்பாக சமரசங்கள் செய்யவேண்டிய நிலைமைகளும் ஏற்படுகின்றன. ஐந்தாம் தர புலமைப் பரிசில் பதினோராம் தரப் பரீட்சை, பதின்மூன்றாந் தரப் பரீட்சை என்பன தொடர்பாக சித்திகள் மற்றும் அதன் வழியான நலன்களின் ஒதுக்கீடுகள் மாணவரின் புலமைக்கு அப்பாலும் சில தகுதி விதிகளை அங்கீகரித்தே மேற்கொள்ளப்படுவதுண்டு.

சர்வதேச மதிப்பீட்டுத் தரங்கள் எமது தேசிய மதிப்பீட்டை விட சிறப்பானவை என்ற சமூக உளவியல் உயர் கல்வியாளரிடம் வலிமை பெற்றிருப்பதால் அரசின் கல்வி மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல்களிலிருந்து தமது பிள்ளைகளை அவர்கள் வெளியே நகர்த்தத் தொடங்கியுள்ளனர். இதனால் உதவி தேவைப்படும் பலவீனமான குடிமக்களுக்கான ஏற்பாடாகவே நிலவும் தேசிய மதிப்பீடுகளும் அதன் தரங்களும் மாறி வருகின்றன. "பலவீனமானவர்களுக்கு பலமான கல்வி மற்றும் மதிப்பீட்டு முறைமை அவசியமில்லை" என்ற கருத்தோட்டம் உள்ளே உறைந்து கிடப்பதாகவும் சந்தேகிக்க இடமுண்டு.

இந்த பன்முக பரிசீலனைகளுக்கு பின்னாலும் சடுதியாக மாற்றிவிட முடியாத சனநாயகத் தடைகளுடன் நாம் மரபுவழி நியமங்களை ஏற்று பரீட்சைத் தோல்விகளை பாடசாலைகளின் தோல்வியாகவும் மாணவர்களின் தோல்வியாகவும் அங்கீகரித்து கொண்டு எமது கருத்தாடலை தொடர்வோம்.

### மாணவர்களின் தோல்வியை யார் தீர்மானிக்கின்றனர்?

ஒத்த பாடசாலை முறைமையும் கற்பித்தல் ஏற்பாடும் இலங்கையின் பொதுக் கல்வி முறைமையின் பெருமைக்குரிய அம்சங்கள்தான். எனினும் அதிகளவு மாணவர்கள் தேசிய பரீட்சை முறைமைகளில் தோல்வியை தொடர்ந்து தழுவி வருகின்றனர். க.பொ.த. (சாதாரண) தரத்தில் சராசரியாக அரைப் பங்கினர் தோல்வி வலயத்திலிருந்து வெளியே வர முடியாதவர்களாகவே உள்ளனர். இலங்கை சராசரியாக மூவாயிரம் கோடி ரூபாவை கல்விக்காக ஒதுக்கும்போது கல்வி முறைமைக்குள் வரமுடியாத வறியவர் உள்ஒதுங்கிய புவியியல் பிரதேச மக்கள் மாற்றுத் திறனாளிகள்,துணையற்ற பெண்கள், அகதிகள் போன்ற பலரும் ஏக்கத்துடன் ஒதுங்கி நின்று பார்க்கின்றனர். ஆனால், வாய்ப்புப் பெற்றவர்கள் கூட முழுமையாக வெற்றிக்கோட்டைத் தொடமுடியாது விரக்தி அடைகின்றனர்.அரச நிதி ஒதுக்கீட்டுக்கான வருவாய் அல்லது விளைவு அல்லது நன்மைதான் என்ன? அதிக நிதிச் செலவிலும் சந்தர்ப்பச் செலவுகளிலும் இந்த தோல்விகள் தொடர்கின்றன.

மாணவர்களில் வெற்றி பெறுவோரை புகழவும், அவர்களுக்கு முடி சூடவும், அவர்களுக்கு உதவவும் மிகப்பெரிய ஏற்பாடுகள் காணப்படுகின்றன. சமூக ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் அரச செயலமைப்பு ரீதியாகவும் பலமான ஏற்பாடுகள் உள்ளன. அவை தொடர்ந்து மெருகூட்டப்பட்டும் வருகின்றன. ஊடகங்களும் அவற்றை ஊதி ஊதி பெரிது படுத்தும் பண்பாட்டுடன் மிளிர்கின்றன.

பிரச்சினை நோக்கி யார் ஒளியைப் பாய்ச்சுவது? பிரச்சினையின் உட்கூறுகளையும், சேர்மானங்களையும் எவ்வாறு கண்டறிவது. இவை புதிய சிந்தனைக்கான முன்தேவைப்பாடுகளாக உள்ளன. மாணவர்களின் பாடசாலை மட்ட செயலாற்றங்கள் பல நிலைகளிலும் அளவிடப்பட வேண்டியன. குறுங்காலத்தில் புலனாகக் கூடியதாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவை சோதனைப் புள்ளிகளும் அவற்றின் தரங்களுமாகும். போட்டி மாதிரியிலும் கற்றலுடன் ஒப்பிடும் இடத்து குறுகிய வாய்ப்பை வழங்குவதாகவும் மேசை சார்ந்த தொழிற்பாடாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. க.பொ.த. (உயர் தர) பரீட்சையை உதாரணப்படுத்தி இந்த சோதனைகளின் முக்கியத்துவம் பின்வரும் வழிகளில் உணரப்படுகின்றது.

* பள்ளிக் கல்வியின் நிறைவாகவும் வெற்றியாகவும் அமைதல்.
* மிகையான போட்டியில் முன்னிலைமைக்கு வந்தமையை அங்கீகரித்தல்.
* பல்கலைக்கழக உயர் கல்வியை இலவசமாக பெறுவதற்குரிய உரிமையை வழங்குதல். (ஒதுக்கும் நிதியை அனுபவித்தல்)
* மாற்று உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் இலவசமாக அல்லது மானியத்துடன் கல்வியைத் தொடர்வதற்குரிய வாய்ப்பை உறுதி செய்தல்.
* ஓரளவு திறன் சார்ந்த (Semi skilled) அல்லது புலமை சார்ந்த (Academic) தொழில் வாய்ப்பு ஒன்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்குதல்.
* தொழில் செய்துகொண்டே பரபரப்பு மற்றும் போட்டி உணர்வு இல்லாமல் தொடர் கல்வி ஒன்றை (திறந்த பல்கலைக்கழகத்தில்) கற்கும் வாய்ப்பை பெறுதல்.

இந்த சோதனை சார்ந்த செயலாற்றம் அல்லது சோதனை வாழ்க்கைத் தொழில் (Career) சார்ந்த நோக்கையும் போக்கையும் மாற்றிவிடும் வல்லமை கொண்டது. இதனால் பொருளாதார மற்றும் சமூக வாழ்வின் தரத்தை அல்லது சமுதாய அடுக்கமைவில் எந்த தட்டில் வாழ முடியும் என்பதை நிர்ணயிப்பதாக பெரிதும் காணப்படுதல்.

பெரும்பாலான சோதனை முறைகள் அறிவு சார்ந்தன. ஞாபகப்படுத்தும் ஆற்றலை மையமாகக் கொண்டவை. துரிதமாக விரல்களையும் சிந்தனைத் தொடர்ச்சியையும் இணைக்குமாறு வலியுறுத்துவன. உள்ளடங்கிய ஆற்றலை விடவும் அதிதீவிரபயிற்சி உடையவர்களுக்கு அதிக வெற்றி வாய்ப்பை வழங்குவன, மதிப்பீட்டு செயன்முறை (Process) களின் பலவீனங்களையும் உள்ளடக்கி இருப்பவை. மாற்றங்களுக்குட்பட்டு வந்தபோதிலும் அடிப்படைகளில் மாற்றம் பெறாதவை. நிதியாற்றல் மற்றும் அதிக நேரம் ஒதுக்கும் வசதிகள் கொண்டமேட்டுக் குடியினருக்கு (Elites) பெரிதும் சாதகமானவை.

இந்த பலவீனமான ஆனால் அதிக நலன்களை மடியில் கட்டிவைத்திருக்கும் சோதனை முறைகள் கல்வி நோக்கிலும், செயற்பாட்டிலும் அதிக முக்கியத்துவம் கொண்டவை. இதன் தோல்வி வாழ்வின் தோல்வியாகி விடுவதாக இந்த முறைமையை வடிவமைத்தவர்கள் இப்போது நம்புகின்றனர்.

(மிகுதி நாளை)

## எட்டு வயதுச் சிறுமியின் கணினி பட்டப்படிப்பு



கண்டியில் கணினிப் பட்டப் படிப்பினை எட்டு வயதுச் சிறுமி ஒருவர் மேற்கொண்டுள்ளார். புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த முறையில் சித்தி பெறுவதே எட்டு வயதான மாணவியின் எதிர்பார்ப்பாக இருக்கும்.

எனினும், கணனிப் பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கல்வி பயிலும் எட்டு வயதுச் சிறுமி ஒருவர் கண்டியில் தனது படிப்பினை மேற்கொண்டுள்ளார்.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அரசாங்கம் அமைக்க வேண்டும்

(கொழும்பு)


தேர்தலுக்கு முன்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை - சூரியவெவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.


தேர்தலை நடத்துவதற்கு முன்னர், சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இருக்க வேண்டும் எனவும், சுயாதீன அரச சேவை ஆணைக்குழு மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவும் இருக்க வேண்டும்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவையும், சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவையும் உடனடியாக ஸ்தாபிக்குமாறு தற்போதைய அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றேன்.

நியாயமான முறையில் சுயாதீன அரச சேவை ஆணைக்குழுவை ஸ்தாபித்து, தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில், அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சியை வெற்றிபெறச் செய்ய



நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.



மேர்சிடிஸ் பென்ஸ் கார் கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## மனைவி மீது கணவன் கட்டுத் துவக்குச் சூடு

(கொழும்பு)

கட்டுத்துவக்கின் மூலம் தனது மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட கணவர், கலேன்பிந்துனுவெவ பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை முற்றியதை அடுத்து கல்குளம் வீட்டில் வைத்து கணவர் ஆத்திரத்தில் மனைவி மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரி- 56 ரக துப்பாக்கியுடன் தலைமன்னாரில் ஒருவர் கைது

(கொழும்பு)

தலைமன்னார் - பேசாலை பகுதியில் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 192 ரவைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவால் குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு 08.40 அளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை தடுத்து வைத்து தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தூர இயக்க வாயிற் கதவில் கழுத்து சிக்கி காவலாளி பலி



(கொழும்பு)

கனேமுல்ல - முலுகஹகொட பிரதேச வீடொன்றில் தூரத்தில் இருந்து இயக்கப்படும் வாயிற் கதவில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் கழுத்து வாயிற் கதவில் சிக்குண்டதால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வாயிற் கதவு காவலாளியாகப் பணிபுரிந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற போது வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும் நேற்றுமுன்தினம் காலை வேளையிலேயே பொலிஸார் இது குறித்து தகவல் அறிந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் பலியானவர் கஹவத்தை - ரயில் வீதி பொரனுவத்தை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நஷ்டஈடு இழுத்தடிப்பு

(கொழும்பு)

ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென இரண்டாம் கட்டமாக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய நஷ்டஈட்டுத் தொகை இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதாக கடும் விசனமும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அக்கறையற்று மௌனிகளாக செயற்படுகிறார்கள் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகையினால் தமக்கான நஷ்டஈட்டுத் தொகையை மேலும் தாமதிக்காமல் துரிதமாக பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு முஸ்லிம் அமைச்சர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் இழுத்தடிக்கப்பட்டால் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்படும் என, காணி உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் இது தொடர்பாக அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எல்.எம்.அதாவுல்லா, ரிசாட் பதியுதீன் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென இரண்டாம் கட்டமாக 2008 ஆம் ஆண்டு 39 பேருக்கு சொந்தமான காணிகள் சட்டப்படி சுவீகரிக்கப்பட்டது.

அதன்படி 2008.06.04 ஆம் திகதி 1552/12 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் இது பிரகடனம் செய்யப்பட்டது.

இக்காணிகள் சுவீகரிக்கப்பட்டு விலை மதிப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டின் பிரகாரம் நிர்ணயிககப்பட்ட நஷ்டஈட்டுத் தொகை இது வரையிலும் எமக்கு கிடைக்கவில்லை. இது ஜனநாயகத்திற்கும் மனிதநேயத்திற்கும் முரணான செயலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தம்புள்ளை தாக்குதலைக் கண்டிக்காதவர் ஆயர் குறித்து பேசுகின்றார்

### மன்னார் சமூக ஆர்வலர் ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

தம்புள்ளையில் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாத அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆயர் தொடர்பில் இனவாதப் போக்குடன் பேசுகின்றமை போக்கிரித்தனமான அரசியலையே காட்டி நிற்பதாக மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரையில் மன்னார் ஆயர் இனவாதம் மதவாதம் இன்றி செயற்பட்டு வருகின்றார். தமிழ், முஸ்ஸிம் மக்களின் ஒற்றுமையினை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

இதற்காக சர்வமத அமைப்பை உருவாக்கி மதத் தலைவர்களை ஒன்றிணைத்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருகின்றார்.

ஆனால் அமைச்சர் ரிசாட் பதியுதீன் நாட்டில் இடம்பெறுகின்ற அரசியல் நிகழ்வுகளின் போது முஸ்லிம் மக்கள் அதிகம் கலந்துகொள்ளும் கூட்டங்களில் இனவாதத்துடன் நடந்து கொள்கின்றார்.

தனது எதிர்கால அரசியலுக்காக தமிழ் மக்களுடன் ஒரு போக்குடனும், முஸ்லிம் மக்களுடன் வேறு ஒரு வேசத்துடனும் அமைச்சர் செயற்படுகின்றார்.

ஆனால் தனது அரசியலுக்காக ஒட்டு மொத்த கத்தோலிக்க மக்களும் கடவுளுக்கு சமனாக மதித்து வரும் மன்னார் ஆயர் தொடர்பில் பேசுவதற்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.

மன்னார் ஆயர் ரிஷாட் பதியுதீன் போன்று போக்கிரித்தனமான அரசியல் ஒன்றையும் அவர் நடத்தவில்லை எனவும் மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.




புலிகள் சேமித்து வைத்திருந்த பெருந்தொகையான C 4 ரக வெடிபொருட்களை நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.புதுக்குடியிருப்பு, இரணைமடு பிரதேசங்களில் இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த எடை 6250 கிலோகிராம் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். இவற்றின் முழுமையான விபரங்களை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

## மகாபொல புலமைப் பரிசிலுக்கு 11,800 மாணவர்கள் தகுதி

(கொழும்பு)



மகாபொல உயர்கல்வி புலமை பரிசிலை வழங்குவதற்கு மகாபொல புலமை பரிசில் பொறுப்புச் சபை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, 2010 - 2011 கல்வி ஆண்டுக்கு பல்கலைக்கழகம் செல்ல அனுமதி பெற்றுள்ள 10,300 மாணவர்கள் மற்றும் ஏனைய உயர்கல்விக்கு அனுமதி பெற்றுள்ள 1500 மாணவர்களுக்கு மகாபொல புலமை பரிசில் கிடைக்கும் என நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலக ஆலோசனையின்படி ஆரம்பத்தில், உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், வணிகம், கலை உள்ளிட்ட துறைகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 25 மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.



# மறதிநோயை விரட்டுவோம்!

- ஆர்.ஜி.ஜெகதீஷ்

**க**மல்ஹாசனின் "உன்னைப்போல் ஒருவன்" படத்தில் "இந்தியாவின் தேசிய வியாதி மறதி" என்ற வசனம் இடம்பெறும். திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட இந்த வசனம், மற்றொரு கோணத்தில் உண்மையாகும் வாய்ப்பு மெல்ல



அதிகரித்து வருகிறது.

"டிமென்ஷியா" என அறியப்படும் மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

உலகளவில் ஆண்டுதோறும் 7 இலட்சம் பேர் மறதி நோயால் பாதிக்கப்படுகின்றனர். உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி 2020ஆம் ஆண்டில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 கோடியாக உயரும்.


இப்போதைய கணக்கெடுப்பின்படி உலகில் 36 இலட்சம் பேர் மறதி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகிலேயே அதிகளவிலான முதியோர்களைக் கொண்டுள்ள பட்டியலில் முதல் இடத்தில் சீனா உள்ளது. இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

இந்நோய் 65 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வர வாய்ப்புள்ளது. இதைத் தடுப்பதற்கான மருத்துவ முறைகள் பெரிதளவில் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், இந்த நோய்க்கான மருந்துகள் ஒவ்வொருவரின் மனதிலும், சமுதாயத்தையும் சார்ந்தே உள்ளது.

சமுதாயத்தில் எல்லோருக்கும் பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. அதாவது, முதுமையில் மறதி என்பது இயல்பு. ஆனால் இந்த நோய் முதியோர்களைத் [illegible]குவதற்கு நாம் எல்லோரும் பொறுப்பாகிறோம் என்பதே மறைமுக உண்மையாகும்.

இந்நோய்க்கான பொதுவான அறிகுறிகள் என்னவென்றால், நபர்களின் பெயரை மறப்பது, வாழ்விடம் மறந்து போகுதல் ஆகியவையாகும். தொடக்கத்தில் அண்மைக்கால சம்பவங்களே மறக்கும். பின்பு காலம் செல்லச் செல்ல பழைய சம்பவங்களும் மறந்து போகும்.

புதிய மனிதர்கள் அல்லது புதிய சூழலைச் சந்திக்கும்போது குழப்பம் ஏற்படும், நடத்தையில்



மாற்றங்கள் ஏற்படும், அடிக்கடி கோபப்படுவது, பொருத்தமற்ற பாலியல் வெளிப்பாடுகள், தனிநல சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கத் தவறுதல், புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் சிரமம் ஏற்படும்.

முதுமையில் ஏற்படக்கூடிய மறதியின் அறிகுறிகள் மீளக்கூடியவையாக அல்லது மீள இயலாதவையாக வகைப்படுத்தப்படுகின்றன. முதுமை மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பத்து சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே சிகிச்சையின் மூலமாக சரிசெய்யக்கூடிய காரணிகளைக் கொண்டுள்ளனர்.

காரணிகளில் பல வேறுபட்ட நோய்ச் செயற்பாடுகள் உள்ளன. அதே போல அறிகுறிகளிலும் பல வேறுபாடுகள் உள்ளன. இளமையில் மன அழுத்தம், மது போன்றவற்றின் தொடர்ச்சியான பயன்பாடு, தொடர்ச்சியான தூக்கமின்மை, புகைப்பழக்கம் ஆகியனவும் முதுமையில் மறதி நோயை அதிகரிக்கும்.

மரபணுக்களும் மறதிநோய் ஏற்படுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், மற்போர் அல்லது தற்காப்புக் கலை போன்றவற்றில் ஈடுபடுவதனால் அடிக்கடி தலையில் காயமடையும் வாய்ப்புள்ளவர்களுக்கும் முதுமையில் மறதிக்கான வாய்ப்புகளும் அதிகம்.

முதியோர்க்ளை மறதிநோய் பாதிப்பதற்கு நம்முடைய பாரம்பரிய குடும்ப அமைப்பு சிதைவதும் ஒரு காரணம் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்பெல்லாம் பெற்றோர்கள் மகன், மகள், மருமகள், பேரக் குழந்தைகள் என்று தங்களது காலம் முடியும் வரை அவர்களுடன் இணைந்து வாழ்ந்து வந்தனர். இப்போது 60 வயதுக்கு மேல் தனிமையை அனுபவித்து வருகின்றனர். இதில் சில பெற்றோர்கள் தங்கள் முதுமையை ஏதோ ஒரு காப்பகத்தில் தங்கள் இறுதி வரை கழிக்கின்றனர்.

குறுக்கெழுத்துப் போட்டிகள், சிறிய கணிதச் செயற்பாடுகள், விளையாட்டுகள் போன்றவை நோய் அதிகரிப்பதைத் தடுக்கும் பயனுள்ள செயற்பாடுகளாகும்.

பிள்ளைகள் தங்களது பெற்றோர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து அவர்களுக்கு அதிக பொறுப்புகளை வழங்க வேண்டும். அவர்களுக்கு வயதாகிவிட்ட காரணத்தால் குடும்பத்தில் இருந்து ஒதுக்கக்கூடாது.

பேரக்குழந்தைகளைக் கவனிக்கு[illegible] பொறுப்புகளை அளிப்பது போன்ற சில விஷயங்களை நாம் செய்வதன் மூலம் அவர்களை மறதிநோய் தாக்காதவாறு நாம் காப்பாற்றலாம்.

சிறு பிள்ளையாக இருந்தபோது நம் விரல்களைப் பிடித்து வழிநடக்கக் கற்றுக்கொடுத்த பெற்றோர்களை, முதுமையில் காப்பகத்துக்கு அழைத்துச் செல்லக் கூடாது.

# காகத்திற்கு உங்கள் குரல் தெரியும்

**வி**ரத நாட்களில் காகத்திற்கு ஒரு பிடி சோற்றை வைத்துவிட்டு உண்ணும் ப்ழக்கம் இந்துக்களிடம் உண்டு. நம் மூதாதையர் காகங்களாக வந்து உண்கிறார்கள் என்பது நம்பிக்கை. காக்கைக்கான சோற்றை வாய்ப்பான இடத்தில் வைத்து விட்டு கா-கா என்று குரல் கொடுக்க காகங்கள் பறந்து வரும்.

பிடி சோற்றை வைத்து விட்டு குரல் கொடுப்பவர் வழக்கமான நபரா அல்லது வேறு ஒருவரா என்பது காக்கைக்குத் தெரியும் என்கிறார்கள் நிபுணர்கள். அதாவது மனிதக் குரலை அடையாளம் காணும் திறன் காகத்திற்கு உள்ளது என்று கூறப்படுகிறது.

வியன்னா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவினர் இது தொடர்பாக காகங்களை வைத்து நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகள் Journal Animal Cognition என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

காகங்களிடம் அன்பு காட்டுபவரும் உண்டு. காக்கைகளைக் கண்டால் விரட்டியடிப்பவர்களும் உண்டு. அந்த அளவில் தங்களிடம் வழக்கமாக அன்பு காட்டுபவர்களின் குரலை காகங்கள் அடையாளம் கண்டுகொள்கின்றன. புதிதாக ஒருவர் அழைத்தால் அவை சற்றே தயக்கம் காட்டுகின்றன.

எட்டு காகங்களைத் தேர்ந்தெடுத்து வியன்னா பல்கலைக் கழகத்தினர் தங்களது ஆராய்ச்சியை நடத்தியுள்ளனர்.

இது ஒருபுறம் இருக்க, வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய ஆராய்ச்சியில் காகங்கள் மனித முகங்களை எளிதில் அடையாளம் காண்பதாகக் கண்டறியப்பட்டது. அவர்கள் 20 ஆண்டுகளாகக் காகங்களை ஆராய்ந்து வருகின்றனர்.

அந்தக் குழுவினர் தங்களது ஆராய்ச்சிக்காக றப்பரினால் ஆன இரு முகமூடிகளைத் தயாரித்தனர். ஒன்று



காட்டுவாசி போன்ற முகமூடி. இன்னொன்று அமெரிக்கத் துணை அதிபராக இருந்த டிக் செனியின் முகம் மாதிரியிலான முகமூடி.

காட்டுவாசி முகமூடி அணிந்த ஆராய்ச்சி ஊழியர்கள் காகங்களைத் துரத்திப் பிடித்து காலில் அடையாளத் துண்டைக் கட்டுவதற்காக, சிறிது நேரம் அடைத்து வைத்துப் பிறகு வெளியே விட்டனர். டிக் செனி முகமூடி அணிந்தவர்கள் காகங்களைத் துன்புறுத்தவில்லை. சில தடவை இப்படி நடந்த பின்னர் காட்டுவாசி முகமூடி அணிந்து யார் சென்றாலும் காகங்கள் கூட்டமாக ஆக்ரோஷத்துடன் தாக்க முனைந்தன.

டிக் செனி முகமூடி அணிந்தவர்களை காகங்கள் எதுவும் செய்யவில்லை. முகத்தை (முகமூடியை) வைத்து தங்களுக்கு தீங்கு இழைக்கக்கூடியவர் யார் என்பதை காகங்கள் அடையாளம் கண்டு கொண்டன என்பதை இந்த ஆராய்ச்சி காட்டியது.

பறவை இனங்களில் காகங்கள்தான் அதிபுத்திசாலி என்பதாகப் பல நிபுணர்களும் கூறுகின்றனர்.

# மன்னிப்பை மறைக்க மாவை செய்த தந்திரம்!

**யா**ழ்ப்பாண மே தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இலங்கைத் தேசியக் கொடியை ஏந்தியமைக்காக, யாழ்ப்பாணத்தில் சுதந்திர ஊடகக் குரல் அமைப்பினரால் நடத்திய விழாவில், மாவை சேனாதிராசா தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். அதன் பின்னர் அதை இரா. சம்பந்தன் முற்றாக மறுதலித்து தேசியக் கொடியை, தான் சுயவிருப்புடன், நன்கு தெரிந்தே ஏந்தி[illegible] என்றும் அதற்காக எவரும் மன்னிப்புக் கோரத் தேவையில்லை என்றும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இதனால் மாவை சேனாதிராசாவின் மார்க்கற் பெரிதும் சரிந்து காணப்பட்டதுடன், சக அங்கத்தவர்களின் வெறுப்புக்கும் ஆளாக நேர்ந்தது. இதனைச் சரி செய்யும் வகையில் கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் தனக்குப் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தில் மாவை எம்.பி. தமிழருக்காக உயிரைக் கொடுப்பது போன்று உரையாற்றியது மட்டுமல்லாது தீர்வு விடயத்தில் அரசாங்கம் வழிக்கு வராவிட்டால் மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் (ஆயுதப் போராட்டமல்ல, சாத்வீகப் பேராட்டம்) நடத்தப் போவதாக உரத்துப் பேசினார்.

உண்மையில் அவர் மன்னிப்பு விவகாரத்தை மறைத்து, இழந்த மரியாதையை மீண்டும் சரி செய்யவே அவ்வாறு பேசினார் என்பதை தமிழ் மக்கள் உடனடியாகவே புரிந்துகொண்டு விட்டனர். ஆனால் இவ்விடயத்தைப் புரிந்துகொள்ளாத தமிழ்ப் பத்திரிகைகளும், இணையத் தளங்களும் மாவை எம்.பி. வீரமாக அதுவும் நாடாளுமன்றத்தில் பேசிவிட்டார் என்பதாக கொட்டை எழுத்தில் போட்டி போட்டுக் கொண்டு, அவரை மீண்டும் தமிழ்வீரனாகச் சித்தரித்து செய்திகளை வெளியிட்ட விதம் உண்மையிலேயே நகைப்புக்குரியது.

- நன்றி: இணையம்

# பொருந்தாத பெயர்கள்

- கண்ணாடிப் பாம்பு என்பது பாம்பல்ல, பல்லி.
- டிட் மவுஸ் (Tit mouse) என்பது எலியல்ல, ஒரு பறவை.
- லேடி பேர்ட் (lady bird) என்பது பறவையல்ல, ஒரு வண்டு.
- பறக்கும் நரி எனப்படுவது நரியல்ல, வெளவால்.
- பிரெய்ரி டோக் (Prairie dog) என்பது நாயல்ல, ஒருவித கொறிக்கும் விலங்காகும்.
- ஃபன்னி போன் (fuunny bone) என்பது எலும்பல்ல, நரம்பு.

# வெயிலுக்கு....

- கீரை, பீட்ரூட், முள்ளங்கி, அன்னாசிப்பழம், மாம்பழம் போன்று இயற்கையிலேயே சூடான காய்கறிகள், பழங்களைத் தவிர்த்துவிடுங்கள்.
- மாம்பழத்தை தவிர்க்கவே முடியாது என்றால் முந்தின நாள் இரவே அதை தண்ணீரில் போட்டுவைத்து, அடுத்த நாள் சாப்பிடுவது பரவாயில்லை.
- உலர்ந்த பழங்களைத் தவிர்த்து உடன் பழங்களைத் தேர்வு செய்யுங்கள்.
- பச்சைக் காய்கறிகள், பழங்களால் தயாரிக்கப்பட்ட சலாட், ஜூஸ் ஆகியவற்றை உட்கொள்ளுங்கள். சீனியைத் தவிர்த்தால் நல்லது.
- வடை, சமோசா, சிப்ஸ், பஜ்ஜி போன்ற எண்ணெய்ப் பலகாரங்களுக்கும், நொறுக்குத் தீனிகளுக்கும் விடை கொடுத்துவிடுங்கள்.
- எலுமிச்சை, தோடம்பழ ஜூஸ் தயாரிக்கும்போது அதில் கொஞ்சம் உப்புத்தூளையும் மிளகுத்தூளையும் கலந்து விட்டால் சளித் தொல்லையில் இருந்து தப்பிக்கலாம்.



# சினிமா சினிமா



நயனை ஏமாற்றியவர்கள் இன்னும் அவரை விடுவதாயில்லை என்றே தெரிகிறது. கடந்த வாரம் பாங்கொக் சென்றுவிட்டு சென்னை திரும்பிய நயன்தாராவிடம் விமான நிலைய அதிகாரிகள் 40 நிமிடங்களுக்கு மேல் விசாரணை நடத்தியுள்ளனர். காரணம், நயன்தாராவின் சூட்கேஸில் ரூபா20 இலட்சம் பணம் இருக்கிறது. அது எப்படி வந்தது? என விசாரியுங்கள் என நிலைய அதிகாரிகளுக்கு தொலை பேசி தகவல் வந்ததாம். பிரபு என்று உடலில் பச்சை குத்தியிருந்த பெயரை அழிக்கவே நயன் பாங்கொக் சென்றார் என்று சொல்லப்படுகிறது. இல்லை, அனைத்துப் பயணிகளுக்கும் நடைபெறும் வழக்கமான சோதனைதான் அது என்கிறது நயன்தாரா தரப்பு. ஒவ்வொரு பயணிக்குமா 40 நிமிடங்கள் சோதிக்கிறார்கள்?



தமிழில் மேக்னா ராஜ் நடித்த எந்தப் படமும் வெற்றி பெறாததால், கேரளத்துக்குப் பறந்தது கிளி. தற்போது மலையாளத்தில் முழுநேர நடிகையாகி விட்டார். வினயன் இயக்கத்தில், அவர் நடித்த, "லங்கேஸ்வரி" என்ற படம் தூள்கிளப்பியுள்ளது. இதனால், அரை டசின் படங்களை கைப்பற்றியுள்ளார். "லங்கேஸ்வரி" படம் "ஜக்கம்மா" என்ற பெயரில் தமிழுக்கு, "டப்"பாகிறது. "இதன்பிறகு தமிழிலும் நான் பிசியாகி விடுவேன்...." என்கிறார் மேக்னா. ஆமாம், தமிழில் நடிக்கவும் பாடவும் மலையாள வாடை இருக்க வேண்டும்.



பயணங்கள் முடிவதில்லை, நான் பாடும் பாடல், அம்மன் கோவில் கிழக்காலே என்று இளையராஜாவின் பலத்தோடு பெரு வெற்றிப் படங்களை, இயக்கியவர், ஆர்.சுந்தரராஜன். சில காலம் படங்களில் நடித்து மட்டுமே வந்த இவர், தற்போது மீண்டும் ஒரு படத்தை இயக்குகிறார். "உயிர் எழுத்து" என்ற பெயரில், அவர் இயக்கும் படத்தில், லாரன்ஸ், கீர்த்தி சாவ்லா ஜோடி சேர்ந்துள்ளனர்.



திருமணத்துக்குப் பின், "தம்பிக்கோட்டை" படத்தில், நரேனுக்கு அக்காவாக நடித்த மீனா, மீண்டும், "சட்டம் ஒரு இருட்டறை" படத்தின் ரீ - மேக்கில், அக்கா வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தை தயாரிக்கும் நடிகர் விஜய் அழைப்பு விடுத்ததும், மறுப்பெதுவுமின்றி ஓடி வந்துவிட்ட மீனா, அடுத்தடுத்து அம்மா வேடம் தவிர, முக்கியத்துவம் வாய்ந்த அண்ணி, அக்கா, அத்தை வேடங்களில் நடிக்க இருப்பதாகவும் கூறுகிறார். ரஜினிக்கு மகளாக நடித்தவர், அவருக்கு அம்மாவாகவும் நடித்த பின்தானே "நடிகை" என்கிற காவடியை இறக்க முடியும்!




கதாநாயகியாக நடிக்க காத்திருந்து ஏமாற்றம் அடைந்த சதா, குத்துப் பாடலுக்கு ஆட சம்மதித்துள்ளார். "ஜெயம்" படத்தில் அறிமுகமானவர் சதா. விக்ரமுடன் அந்நியன், அஜித்துடன் திருப்பதி, மாதவனுடன் எதிரி என முன்னணி நடிகர்களுடன் நடித்தபோதும் அவரால் தமிழில் முன்னுக்கு வர முடியவில்லை. கடைசியாக அவர் தமிழில் "புலி வேஷம்" படத்தில் நடித்தார். யாருமே கண்டுகொள்ளவில்லை. கோலிவுட், பொலிவுட், டோலிவுட் என 3 படவுலகிலும் அவர் கைவிடப்பட்ட நிலையில் இருந்தவருக்கு சுந்தர்.சி அழைப்பு விடுத்திருக்கிறார். ஒரே ஒரு குத்துப்பாடலுக்கு என்றவுடன் அதிர்ச்சியான அவருக்கு, இது வெறும் குத்துப்பாடல் அல்ல, படத்தின் ஹீரோவான விஷாலுடன் ஆடும் முக்கியமான பாடல் என்று சம்மதிக்க வைத்துள்ளனர்.

# தீர்க்கம்

**- மதியழகன் சுப்பையா**

வண்ணங்கள் பற்றி எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறோமா? நமக்கு எத்தனை வண்ணங்களின் பெயர்கள் தெரியும்? ஒவ்வொருவராய் எண்ணிக் கொள்வோம். இவ்வளவு குறைவான வண்ணங்களையா நாம் காண்கிறோம்? வண்ணங்களுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு



இருக்கக் கூடும்.

இல்லையேல் நம் பயன் பொருட்கள் அனைத்திற்கும் வண்ணம் தேர்வதை வழக்கமாக ஏன் கொள்ள வேண்டும். ஒரு சில பொருட்களுக்கு நிரந்தர வண்ணங்களைக் கொடுத்து அடையாளப் படுத்தி விட்டோம்.

கறுப்பு நிறம் கண்டனத்தையும் துக்கத்தையும் குறிக்கிறது. மஞ்சள் மங்கலத்தையும் மகிழ்ச்சியையும் குறிக்கிறது. பச்சை பசுமையையும் வளத்தையும் குறிக்கிறது. வெள்ளை தூய்மையையும் சமாதானத்தையும் குறிக்கிறது. இப்படி ஒவ்வொரு வண்ணமும் வெவ்வேறு குணங்களின் குறியீடாக அமைகிறது.

கோபத்தையும் புரட்சியையும் வெளிப்படுத்தவல்லது சிவப்பு. காதலர்கள் கொண்டாடுவதும் சிவப்பைத்தான். காதலும் புரட்சி தானே.

வண்ணம் என்பதற்கு அழகு என்றும் பொருள் உள்ளது. வண்ணங்கள் இல்லையெனில் அழகு என்பது ஏது? அழகான அனைத்துப் பொருட்களும் வண்ணமிக்கதாகவே உள்ளது. வண்ணம் இல்லாத பொருட்கள் அழகானதா என்பதை தெரிய வண்ணமில்லா சூழலில் வாழ்ந்திருக்க வேண்டும். அப்படி ஒரு காலம் இருந்ததாக வரலாற்றுப் பதிவு இல்லை.

குணத்தைக் குறிப்பதும் வண்ணம்தான். வெண்தாமரையாள், செந்தாமரையாள், பொற்றாமரையாள் என தாங்கள் பெற்றிருக்கும் தாமரை வண்ணங்களுக்கு ஏற்ப மூதேவியரின் குணங்கள் உள்ளதாக மத இலக்கியம் காட்டுகிறது.

வண்ணங்கள் மகிழ்ச்சியைத் தருமா என்றால், தரும். எண்ணங்களுக்கும் வண்ணங்களுக்கும் தொடர்பு உண்டாவெனில், உண்டு. வண்ணங்கள் ஆற்றல் மிக்கது. வண்ணங்கள் கொடியது. வண்ணங்களை விட்டு விலகிச் செல்வது ஆகாத காரியம். ஓவியப் பரப்பில் வண்ணங்களின் முக்கியத்துவம் நாம் அறிவோம். வெறும் வண்ணங்கள் சில நிகழ்வுகளை, பறவைகளை, மிருகங்களை மற்றும் மனிதர்களையும் கூட நினைவு படுத்துகின்றன.

வீட்டின் உத்திரத்தில் வெள்ளை வண்ணம் பூசப் படுவதன் காரணம் வெள்ளை சோர்வை உண்டாக்கி தூக்கத்தை தருவதால்தான். மருத்துவமனைகளின் வெள்ளைக்கும் இதையே காரணமாக கொள்ளலாம். வண்ணங்கள் மகிழ்ச்சியை, சோர்வை, கோபத்தை என உணர்ச்சிகளை தூண்டக் கூடியதாகவும் உள்ளது.

வண்ணங்கள் கலந்து புதிய வண்ணம் பிறக்கிறது. புதியவை மீண்டும் கலந்து இன்னும் புதியவை பிறக்கிறது. இது தொடர்ந்துகொண்டே இருக்கும். புதிய வண்ணங்கள் பிறக்கிற போது வண்ணங்களோடு தொடர்புடைய அனைத்தும் புதுப்பிக்கப் படுகிறது.

வண்ணமிழத்தல் வருத்தமானது. வண்ணம் இழத்தல் வனப்பை இழத்தலுக்கு ஒப்பாகும். வண்ணமிழத்தல் முதிர்ச்சியையும் அனுபவ ஆற்றலையும் சுட்டுவதாகும். வண்ணம் இழப்பதை விடவும் வண்ணம் பெறுதலில் வேட்கையும் ஈடுபாடும் அதிகம்.

ஆதார வண்ணங்கள் கலந்து, கோடி வண்ணங்கள் பிறந்து விட்டன. இன்னும் பிறக்க இருக்கின்றன. மனித சமுதாய வளர்சிக்கும் அழிவுக்கும் இதுவே ஆதார சூத்திரம் எனலாம்.

"இயற்கையாகவோ செயற்கையாகவோ செலுத்தப் படும் ஒளியில் காணக்கிடைப்பது வண்ணமாகும்" என்பது வண்ணத்தின் வரையறை.

# ஓம் சாந்தி



உயிரைப் பிடுங்கியிழுக்கும் இந்தச் சித்ரவதைகளுக்கு
முடிவேயில்லையா எனப் புலம்புகிறாய்

நான் சொன்னபடி முன்னமே செத்திருந்தால்
தப்பித்திருக்கலாமே என்கிறேன்

அட கோழையே
சாவதற்கா
இவ்வளவு கஷ்டப்படுகிறோம் என்கிறான்
விளக்குக்கம்பத்தில் தொங்கவிடப்பட்டவன்

கஷ்டப்பட்டுக் கொண்டேயிருந்தால்
வாழ்வதுதான் எப்போதென
எனக்கெழுந்த கேள்வியை யாரோ கேட்கிறார்கள்

சண்டையிடாமல் இருங்களேன் என்று உபதேசித்தபடி
மணல்மூட்டைகளுக்குப் பின்னிருந்து வந்த ஒருவன்
நிதானமாய் சுட்டுத்தள்ளுகிறான்
நம் ஒவ்வொருவரையும்.

**- ஆதவன் தீட்சண்யா**

- எலுமிச்சம்பழச் சாறைப் பிழிந்து ஃப்ரீஸர் தட்டில் ஊற்றி குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடுங்கள். தேவைப்படும்போது அந்த க்யூப்களைப் பயன்படுத்தி உடனே ஜூஸ் தயாரித்துவிடலாம்.
- கடையில் வாங்கும் குளிர்பானங்களைத் தவிர்த்துவிடுங்கள்.
- மூக்குப்பிடிக்க சாப்பிடாமல் அரை வயிறாய் சாப்பிடுங்கள். நிறைய நீரருந்துங்கள்.
- வெந்தயத்தை நீரில் ஊற வைத்து தினமும் காலையில் அருந்தினால், கோடையில் ஏற்படும் நோய்கள் எதுவும் அண்டாது.
- வெயிலினால் ஏற்படும் வியர்க்குருவுக்கு பனை நுங்கு சிறந்த மருந்தாகும். வியர்க்குரு உள்ள இடத்தில் நுங்கைத் தடவினால் பலன் கிடைக்கும். சந்தனமும் பலன் தரும்.


# 38 வயதில்...

**38ஆவது வயது சாதனை வயதாகக் கருதப்படுகிறது.**

38ஆவது வயதில்

- நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் காலடி வைத்தார்.
- ரூபால்ட் டீஸல், டீஸல் எண்ணெயைக் கண்டுபிடித்தார்.
- ஹெர்பர்ட் போலரோய்ட் கமெராவைக் கண்டறிந்தார்.
- கேப்பியன் மாலோபியன் குழாயைக் கண்டுபிடித்தார்.
- இங்கிலாந்தின் ஹாவ்வாக் எல்லீஸ் புகழ் பெற்ற "சைக்கோலஜி ஓ்.ப் செக்ஸ்" என்ற புத்தகத்தை எழுதினார்.
- சச்சின் டெண்டுல்கர் தனது நூறாவது சதத்தை அடித்தார்.

# காங்கேசன்துறை சீமெந்து ஆலை இவ்வருட இறுதியில் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து ஆலை வருட இறுதியில் உற்பத்திகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1950 ஆம் ஆண்டில், முன்னாள் கைத்தொழில் அமைச்சர் ஜி.ஜி. பொன்னம்பலத்தினால் அமைக்கப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து ஆலை இந்த வருட இறுதியில் தமது உற்பத்திகளை ஆரம்பிக்கவுள்ளது.

அரச சொத்து மற்றும் கைத்தொழில் அபிவிருத்தித்துறை அமைச்சின் செயலாளர் விலிகமகே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

போர் காரணமாக பாதிக்கப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து ஆலை தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் காங்கேசன்துறை சிமேந்து ஆலை தனது பணிகளை ஆரம்பிக்கும் போது, வடக்கு கிழக்கு உட்பட்ட இடங்களின் கட்டுமானப் பணிகளுக்கு அது பாரியளவில் உதவும் என்று வலிகமகே குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆலையில் ஒரு மணித்தியாலத்துக்கு 2600 சீமெந்து பொதிகளை உற்பத்தி செய்ய முடியும் இதன்படி வருட உற்பத்தி 249. 600 மெற்றிக் தொன்களாகும்.

இதன்மூலம் வருடம் ஒன்றுக்கு 90 மில்லியன் ரூபாய்களை வருமானமாக எதிர்ப்பார்ப்பதாக விலிகமகே குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த சீமெந்து உற்பத்திக்கான முழுமை மூலப்பொருட்களும் யாழ்ப்பாணம், மன்னார், மறறும் புததளம் ஆகிய இடங்களிலருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடாத்திய மாவட்ட மட்ட நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இருளினை நீக்கி எனும் நாடகம் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

இந்நாடகமானது நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் எஸ்.ரி.குமரனின் எழுத்துருவாக்கம் நெறியாள்கையில் ஆற்றுகை செய்யப்பட்டது. காட்சியமைப்பினை பிரவீனும் இசையினை ஏ.நிலக்ஷனும் மேற்கொண்டார்கள்.

நடிகர்களாக தயாநிசன், கவிராஜ், பிரவீன், பிரசாந், ஜெனிற்றன், அபிஷேக், தர்மிசன், சண்முகப்பிரியன் ஆகியோர் செயற்பட்டார்கள்.

# மாணவியை குடையால் தாக்கிய ஆசிரியை

(கொழும்பு)



மாணவியொருவரை குடையால் தாக்கியதால் காயமடைந்த மாணவி வைத்தியசால்லயில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மினுவாங்கொட நாலந்த மகளீர் பாடசாலையின் ஆசிரியை ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தில் பாடசாலையில் கல்வி பயிலும் 12 ஆம் ஆண்டு மாணவியே காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காசோலை தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடே சம்பவத்திற்கு காரணம் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸார் ஆசிரியையைக் கைதுசெய்த போதிலும் இரு தரப்பினரும சமரசம் செய்துகொண்டதை அடுத்து ஆசிரியை விடுவிக்கப் பட்டார்.

# மக்கள் வங்கியின் பரிசுப் பொருட்கள்

மக்கள் வங்கி இசுறு உதான மற்றும் சிசு உதான கணக்குகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களை அதன் கிளைகளூடாக வழங்கி வருகின்றது.

இதன் பிரகாரம் இசுறு உதான கணக்கில் ஆகக்குறைந்த தொகையான 1000 ரூபா வைப்பிலிடுவோருக்கு இசுறு உதான கர[illegible] பொம்மை.

[illegible] ரூபா வைப்பிலிடுவோருக்கு வர்ண பாடப்புத்தகம் அல்லது பென்சில் பெட்டி அல்லது சாப்பாட்டுப் பெட்டி.

5000 வைப்பிலிடுவோருக்கு இசுறு உதான பாடசாலை புத்தகப் பை அல்லது விளையாட்டுப் பொருட்கள் அல்லது சாப்பாட்டுப் பெட்டி (குளிர் அல்லது சூடு) அல்லது பில்டிங் புளொக் (Building Block).

10,000 வைப்பிலிடுவோருக்கு அறிவுப் புதிர் படங்கள் அல்லது இசுறு உதான குடை.

25,000 வைப்பிலிடுவோருக்கு பாலர் பாடசாலை உபகரணத் தொகுதி.

50,000 வைப்பிலிடுவோருக்கு தொலை இயக்க விளையாட்டுக் கார் அல்லது பாடும் - பேசும் மின்சாரப் பொம்மை அல்லது ரூபா 1200 பெறுமதியான பரிசுச் சீட்டு.

100,000 ரூபா வைப்பிலிடுவோருக்கு முச்சக்கர வண்டி (Tricycle) அல்லது மெலோடிககா அல்லது ரூபா 3000 பெறுமதியான பரிசுச் சீட்டு.

250,000 ரூபா வைப்பிலிடுவோருக்கு 3500 பெறுமதியான பரிசுச் சீட்டு.

500,000 ரூபா வைப்பிலிடுவோருக்கு 5000 பெறுமதியான பரிசுச் சீட்டு.

1000000 ரூபா வைப்பிலிடுவோருக்கு 10000 ரூபா பெறுமதியான பரிசுச் சீட்டு வழங்கப்படுகின்றது.

சிசு உதான கணக்கில் ஆகக் குறைந்த தொகையான 1000 ரூபா வைப்பிலிடுவோருக்கு சிசு உதான தொப்பி.

2500 ரூபா வைப்பிலிடுவோருக்கு 200 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பி அல்லது மேசைக் கடிகாரம்.

5000 ரூபா வைப்பிலிடுவோருக்கு சிசு உதான பாடசாலைப் புத்தகப் பை அல்லது ரூபா 300 பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் அல்லது சிசு உதான குடை அல்லது சாப்பாட்டுப் பெட்டி.

10000 ரூபா வைப்பிலிடுவோருக்கு கைக்கடிகாரம் அல்லது மேசைக் கடிகாரம் அல்லது மழை அங்கி.

25000 ரூபா வைப்பிலிடுவோருக்கு அகராதி தமிழ் - ஆங்கிலம் அல்லது சிங்களம் - ஆங்கிலம்.

50000 ரூபா வைப்பிலிடுவோருக்கு கணிப்பான் (Scientific Calculator) அல்லது ஆங்கிலம் - ஆங்கில அகராதி (Oxford) அல்லது பென் ட்ரைவ் (pen drive).

100000 ரூபா வைப்பிலிடுவோருக்கு மேசை விளக்கும் கணிப்பானும் (Scientific Calculator) அல்லது ரூபா 2000 பெறுமதியான பரிசுச் சீட்டு.

250000 ரூபா வைப்பிலிடுவோருக்கு கைக் கடிகாரம் அல்லது பயணப் பை அல்லது மெலோடிக்கா அல்லது ரூபா 2500 பெறுமதியான பரிசுச்சீட்டு.

500000 ரூபா வைப்பிலிடுவோருக்கு (Scientific Calculator) ஒலிப்பதிவுக் கருவி அல்லது ரூபா 5000 பெறமதியான பரிசுச் சீட்டு அல்லது சைக்கிள்.

1000000 ரூபா வைப்பிலிடுவோருக்கு மின்சார ஓகன் அல்லது சைக்கிள் அல்லது ரூபா 10,000 பெறுமதியான பரிசுச் சீட்டு வழங்கப்படுகின்றது.

# காலிமுகத் திடலில் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து

(கொழும்பு)

வெற்றிக் கொண்டாட்ட ஒத்திகையை முன்னிட்டு காலிமுகத் திடலின் வாகனப் போக்குவரத்துககள் இன்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மட்டுப்படுத்தப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன்படி, காலை 6.30 முதல் மாலை 4.30 வரையான காலப் பகுதியில் காலிமுகத்திடல் சுற்றுவட்டம் முதல் ஜனாதிபதி செயலகத்திறகு அருகிலுள்ள சுற்று வட்டம் வரை ஒரு வழி வாகனப் போக்கு வரத்துக்கள் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதி மூடப்பட்டுள்ள காலப்பகுதியில் சாரதிகளை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மது குடிப்பது ஆண்கள்; சீரழிவது குடும்பப் பெண்கள்

## வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள்

(பருத்தித்துறை)

மதுவால் மிகவும் சீரழிவது குடும்பப் பெண்கள் தான். அதிகமான பெண்கள் நாளாந்தம் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என வல்வெட்டித்துறை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் மது ஒழிப்பு சம்பந்தமான நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய காலப்பகுதியில் பிரதான மையப்பகுதியில் மதுக் கடைகள் உள்ளன. இதனை மக்களுக்கு இடையூறு இல்லாத இடத்திற்கு அகற்ற வேண்டும்.

எத்தனையோ அறிவாளிகள், சட்டத்தரணிகள், பெரியோர்கள் இருந்தும் மதுபாவனையைத் தடை செய்ய முடியவில்லை என்றார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் மு.சந்திரதாஸ், பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரி யூட் லுமினா ஜோர்ஜ், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்க சிரேஷ்ட நீர் சுகாதார பொருளியளாளர் நிமால கேமச் சந்திர, பருத்தித்துறை முஸ்லிம் பள்ளிவாசல் பேசிமம் மௌலவி சுபில் மற்றும் மாவட்ட பண்பாட்டு மற்றும் கலாசார அலுவலர் திருமதி சுகுணா, பிரதேச மற்று நகர சபை உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (112)

# வட மாகாண தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வடக்கு மாகாண தமிழ் தினப்போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரங்கள் வருமாறு,

இலக்கணப் போட்டி

ப.சரண்யா (இந்து மகளிர் கல்லூரி - வடமராட்சி), செ.மயூசா (வித்தியானந்தாக் கல்லூரி - முல்லைத்தீவு), வி.டிலானி மேகலா (முருங்கன் ம.வித்தி - மன்னார்).

திறனாய்வுப் போட்டி

லோ.தேனுஷா (விக்னேஸ்வராக் கல்லூரி - வடமராட்சி), கே.அனோஜா (புதுக்குளம் ம.வித்தி - வவுனியா வடக்கு), இ.சாளினி (விசுவமடு ம. வித்தி - முல்லைத்தீவு).

குறுநாடக ஆக்கம்

தே.உமையாழினி (அருணோதயாக் கல்லூரி - வலிகாமம்), அ.பா.நிபாயா (அல்மினா ம. விததி - மன்னார்), செ.நிலானி (கலைமகள் வித்தி - முல்லைத்தீவு).

குறுநாடக ஆக்கம்

தா.அமலசெபஸ்ரி (பத்திமா ம.ம.வித்தி - மன்னார்), பூ.சுலக்ஷி (விபுலானந்தாக் கல்லூரி - வவுனியா தெற்கு), ஜி.அபர்ணா (வைததீஸ்வராக் கல்லூரி - யாழ்ப்பாணம்).

கவிதை ஆக்கம்

வ.விதுசா (மகாஜனாக் கல்லூரி - வலிகாமம்) மோ.டிலோஜினி (புனித திரேசா பெண்கள் கல்லூரி - கிளிநொச்சி), ஞா.எஸ் தர்மாலினி (தூய யோசப்வாஸ் ம. வித்தி -மடு).

கவிதை ஆக்கம் பிரிவு -5

பு.ஆரத்தியா (மத்திய மகளிர் கல்லூரி - வடமராட்சி), அ.அருண் (தூய யோசப்வாஸ் ம. வித்தி -மடு), ஜெ.ஜனார்த்தகன் (மல்லாவி மத்திய கல்லூரி - துணுக்காய்).

சிறுகதை ஆக்கம்

ம.லூட்ஸ்பூரணி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - யாழ்ப்பாணம்), சி.விதுர்சனா (கலைமகள் வித்தி - முல்லைத்தீவு), அ.பா.ஸஹ்ரா (முஸ்லிம் ம.வித்தி - வவுனியா தெற்கு),


சிறுகதை ஆக்கம்

அ.கஜன் (மல்லாவி மத்திய கல்லூரி - துணுக்காய்), சு.சோமிகா (மகாஜனாக் கல்லூரி - வலிகாமம்), ய.பொஸ்ரினா (வேரவில் இந்து ம.வித்தி - கிளிநொச்சி).

சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து


நிர்மாணி வக்சலா (அக்ர போதி ம.வித்தி - வவுனியா தெற்கு), கவிதா சந்த்கெரணி (மடுகந்த ம.வித்தி - வவுனியா தெற்கு). (முற்றும் ) (44)

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக. பகுதி - II




அ. 1 தொடக்கம் 8 வரையான பெயர்களைக் குறிப்பிடுக.

ஆ. கீழே A இருந்து H வரையான பகுதிகளை பெயர்களைக் குறிப்பிடுக.




இ. பின்வரும் எண் முறைமை பிரசின்னங்களைத் தீர்க்க.
பின்வரும் எண்களை அடி பத்திற்கு மாற்றுக.
1) 110011 இரண்டு
2) 234 எட்டு
3) 512 பதினாறு

ஈ) பின்வரும் குறியீடுகளுக்கு விரிவாக்கங்களை எழுதுக.
1) 2GL
2) CPU
3) OS
4) PC

c)
1) தரவு என்றால் என்ன?
2) தகவல் என்றால் என்ன?
3) கணினியின் பிரதான செயற்படு பகுதிகள் எவை?

02)
1) கணினி என்றால் என்ன?
2) கணினியால் செய்யக் கூடிய கருமங்கள் 4 இனை குறிப்பிடுக.
3) கணினியின் இயல்புகள் 4 இனை தருக.

03)
1) கணினி வரலாற்றுக் காலங்களை ஆண்டுகளுடன் பட்டியற்படுத்துக.
2) Vacuum Tubes கால கணினிகள் பற்றி 3 தகவல்கள் தருக.
3) Mapuk; IC (Integrated Circuit) களிற்குப் பதிலாக ஒரு Micro Processor பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே இக்காலத்தில் அறிமுகமான இரண்டு விடயங்களின்பெயர்களை குறிப்பிடுக.


04)
1) PS/2 Ports இல் இணைக்கக் கூடிய Devices இரண்டு தருக.
2) தற்பொழுது Printers, scanners, pen derive போன்றவற்றினை இணைப்பதற்கு பயன்படும் Port இன் பெயர் யாது?
3) மென் பொருள் என்றால் என்ன?

05)
1) கணினி இடத்தியல் வலையமைப்பு (Types of Network topology) வகைகள் பட்டியற்படுத்துக.
2) அவற்றின் இரண்டினை படத்துடன் விளக்குக.
3) வலையமைப்பின் பிரதான வகைகள் (Types of networks) எவை?
4) வலையமைப்பினால் (Network) நாம் பெறும் நன்மை 3 தருக.

06)
1) இடப்பெறுமானம் கொண்ட எண்வகைகளைக் குறிப்பிடுக.
2) ஒவ்வொரு இலக்க முறைமையிலும் அடங்கும் இலக்கங்களை வரையறை செய்க.
3) தரக் கட்டலை (logic gates) வகைகளை படத்துடன் குறிப்பிடுக.
4) ஏதாவது இரண்டு தர்க்கப்படலைகளை (Logical gates) வரைந்து அவற்றிற்குரிய உண்மை அட்டவணை (Truth table) களைக் குறிப்பிடுக.



## ICT & GIT மாணவர்களுக்கான MCQ வினா விடைகள்



# கல்வி முரசு

(AJ. Nimalrajan)




01) ICT என்பது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?
1) வானியல் தகவல் தொழில் நுட்பம்
2) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்
3) தகவல் விண்வெளி தொழில் நுட்பம்
4) புவியியல் தகவல் தொழில் நுட்பம்

02) குறைவான இடவசதி மின்சாரப் பாவனை என்பவற்றை கொண்ட VDU பின்வருவனவற்றுள் எது(வை)?
1) CRT 2) LCD
3) CTR,LCD 4) IBM 1130 Main frame

03) கணினிக்குரிய இயல்புகளில் ஒன்று.
1) கல்வி 2) தொடர்பு 3) வேகம் 4) கணிதம்

04) பின்வருவனவற்றுள் Primary storage (பிரதான நினைவகம்) எது?
1) Hard disk 2) Processor 3) RMA 4) WORM

05) பின்வரும் படத்திலுள்ள வெற்றுக் கூட்டில் வரக்கூடியது.




1) Processing 2) Properties 3) software 4) frequency

06) எம்முடன் இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியது.
1) firm ware 2) Live ware
3) Hard ware 4) soft ware

07) Origin (உற்பத்தி) என்பது எதனை உணர்த்துகிறது?
1) கணினி பெறுபேறு
2) கணினி செயற்படும் தன்மை
3) தகவலின் இயல்பு
4) தொடர்பாடல் இயல்பு

08) 8 Bits கள் 1 Byte எனின் 4 Bits களை எவ்வாறு அழைக்கலாம்?
1) Nibble 2) Kilibyte 3) MHZ 4) peta

09) பின்வருவனவற்றில் எது Input Device ஆகவும் Out put Device ஆகவும் தொழிற்படும்?
1) Mouse 2) Scannre 3) VDU 4) Modem

10) விரிபரப்பு வலையமைப்பு (WAN) என்பதன் விரிவாக்கம் யாது?
1) Word Area Network 2) Wide Area Net work
3) Wide Auto Network 4) Web Area Network

11) பின்வரும் அளவுப் பிரமாணங்களில் எதில் கூடியளவு தகவல்களை சேகரிக்க முடியும்.
1) 25GB 2) 25MB 3) 250MB 4) 2500Kb

12)வலையமைப்பின் இடத்தியல் வகையில் பின்வருவனவற்றுள் எது உள்ளடங்கும்?
1) WAN 2) LAN 3) Mesh 4) MAN

13) கணினி என்பது.
1) ஒரு இலத்திரனியல் சாதனம்
2) தரவுகளை செய்முறைக் குட்படுத்தும்
3) Prgram களைக் கட்டுப்படுத்தி செயற்படும்
4) மேற்கூறிய யாவும் சரி

14) படத்தில் காட்டப்பட்ட இடத்தியல் வலையமைப்பின் (Network topology) எது?
1) Ring (வளையம்) 2) Star (விண்மீன்)
3) Tree (மரம்) 4) Bus (பாட்டை)

15) பின்னக வடிவில் தரவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் சாதனம் யாது?
1) Analog Computer 2) Telephone
3) Digital Computer 4) Radio

16) Bus Topology இல் பிரதானமாகக் காணப்படுகின்ற cable ஆனது எவ்வாறு அழைக்கப்படும்?
1) Bone 2) Hub 3) Node 4) Terminator

17) Analog Computer செயற்பாடுகளுக்கு உதாரணமாகக் கூறக் கூடியது.
1) Digital Camera 2)கார்வேக மாணி
3) பெற்றோல் பம்பி 4) Mobile phone

18) பின்வருவனவற்றுள் தேடற் பொறி (Search Engine) எது?
1) http 2) msn 3) lan 4) com

19) IBM Ps/2 என்பது
1) Mini Computer 2) Micro Computer
3) Main frame computer 4) Purpose computer

20) இராணுவம் மற்றும் அரசாங்கம் சார்பான இணைய முகவரியில் காணக்கூடிய Domain குறியீடு எது?
1) ....edu 2) ....net 3) ....gov 4) ...org

21) CPU என்பதன் விரிவாக்கம்.
1) Central Processing Unit
2) Central Purpose Unit
3) Communication Purpose Unit
4) Compact Processing unit

22) URL என்பதன் சரியான விரிவாக்கத்தினைத் தெரிவு செய்க.
1) Unit Refresh Locator 2) Uniform Refresh Locator
3) Unit Resource Locater 4) Uniform Resource Locator

23) கணனியின் தகவல்கள் எவ்வாறு செயற்பட்டுச் சேகரிக்கப்படுகின்றன.
1) Octal method 2) Binary Method
3) Decimal method 4) data base

24) http:www.orrshillguru.com என்ற இணைய முகவரியில் protocol ஆகத் தொழிற்படுவது எது?
1) http 2) www 3) .com 4) orrshillgiry

25) xU MB யில் எத்தனை KB அளவுகள் உள்ளன.
1) 1004 Kb 2) 8Kb 3) 1024byte 4) 1024Kb

26) தொலைபேசி இணைப்பினூடாகக் கணினியில் இணைய (internet) வசதியினைப் பெற்றுத்தருகின்ற தொழிற்பாட்டினைச் செய்வது யாது?
1) Telephone 2) Modem 3) Digital 4) CPU



27) கணினியின் தந்தை எனக் கருதப்படுபவர்?
1) Billgates 2) Abacus 3) Charles barrage 4) pascaline

28) இந்த வடிவமான சமிக்ஞை (Signal) எவ்வாறு அழைக்கப்படும்?
1) flash signal 2) Analog signal
3) Digital signal 4) Arrow signal

29) நாம் பயன்படுத்துகின்ற 1.44 MB floppy இன் அளவு யாது?
1) 6" 2) 3.5" 3) 8" 4) 5.25"

30) Blaster என்பது
1) தேடுதளத்தில் ஒன்று
2) கணினி வகைகளில் ஒன்று
3) சுட்டி வகைகளில் ஒன்று
4) கணினி நச்சு நிரல்களில் ஒன்று

31) பின்வருவனவற்றுள் உள்ளீடாகவும் வெளியீடாகவும் தொழிற்படும் கருவிகள் எவை?
1) Floppy, Pinter 2) CD, Modem
3) B மட்டும் சரி 4) மூன்றும் சரி

32) பிரயோகப் பொதிகளை (Application Software) களைத் தாக்கக் கூடிய Virus வகை எது?
1) macro virus 2) boot cirrus 3) file virus 4) anti virus

33) 4817 என்ற இலக்கத்தை Type செய்வதற்கு எத்தனை bytes தேவைப்படும்?
1) 4 2) 8 3) 128 4) 16

34) பின்வருவனவற்றுள் Anti Virus software ஆக அமைவது எது?
1) Trojan 2) Beast 3) Scold 4) Nimda

35) CPU இல் காணப்படுகின்ற Mother board ஆனது
1) மென்பொருள்
2) மென்மின் சுற்று
3) வன் பொருள்
4) வன் மின்சுற்று

36) Charles Babbage இன் எந்தப் படைப்பானது கணினி உருவாக்கத்திற்கு துணைபுரிந்தது
1) ENIAC 2) Difference engine
3) Analytical engine 4) UNIVAC

37) Mouse பின்வரும் எந்தப் பாகத்துடன் இணைக்கப்படுகின்றது?
1) Key boar 2) monitor 3) speaker 4) CPU

38) Vacuum tube காலம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற கணினிக் காலம் எது?
1) 1979 - இன்றுவரை 2) 1959 – 1963
3) 1964 – 1979 4) 1951 – 1958

39) கணினியின் மிகச் சிற்ய அலகுக் கூறாகக் காணப்படுவது
1) bit 2) byte 3) megabyte 4) tiga byte

40) 4th generation computer காலத்தில் ஆயிரக்கணக்கான ICC (Interacted Circuit) செய்ய வேண்டிய கருமத்திற்குப் பதிலாக ஒரு நுட்பமான கருவி கண்டு பிடிக்கப்பட்டது அது?
1) Micro processor 2) GUI
3) Micro Chip 4) Transistor

# வடக்கில் 738 ஆசிரியர்களுக்கு கடந்த ஆண்டு ஆசிரிய நியமனங்கள்

(கிரு-சிகரம்)


வடமாகாணத்தில் கடந்த வருடம் 738 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள 2011ஆம் ஆண்டுக்கான அடைவுகள் 2012 ஆண்டுக்கான திட்டங்கள் என்ற புள்ளிவிபர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 101 தேசிய கல்வியற்கல்லூரி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்கள், 474 கலைப்பட்டதாரி ஆசிரியர்கள், 97 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் 66 ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்கள் என 738 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வடமாகாணத்தில் இந்த வருடம் 75 பாடசாலைகள் அபிவிருத்திக்கு உள்வாங்கப்படவுள்ளன எனவும் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 8 பாடசாலைகளும், வலிகாமத்தில் 9 பாடசாலைகளும், தென்மராட்சியில் 4 பாடசாலைகளும், வடமராட்சியில் 6 பாடசாலைகளும், தீவகத்தில் 6 பாடசாலைகளும், அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன், கிளிநொச்சியில் 7 பாடசாலைகளும், முல்லைத்தீவில் 4 பாடசாலைகளும், துணுக்காயில் 6 பாடசாலைகளும், வவுனியா தெற்கில் 7 பாடசாலைகளும், வவுனியா வடக்கில் 6 பாடசாலைகளும், மன்னாரில் 7 பாடசாலைகளும், மடுவில் 5 பாடசாலைகளும் உள்ளடங்கலாக 75 பாடாசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

# கோப்பாய் ஸ்ரீ வீரமாகாளி ஆலயத்தில் வேட்டைத் திருவிழா



(சாந்தன்-சிகரம்)

கோப்பாய் தெற்கு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று வேட்டைத் திருவிழா நடைபெறவுள்ளது.


இந்த ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 06ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை கொடியேற்றதுடன் ஆரம்பமாகியது. இந்த அலங்காரத் திருவிழாவின் 10ஆம் நாளான இன்று வேட்டைத் திருவிழா நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 19ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று அலங்காரத் திருவிழா நிறைவடையவுள்ளது.

உற்சவ கால பிரதம குருவும், ஆலய நித்திய பூசகருமாகிய வேதாகம வித்துவ சிரோன்மணி கிரிஜாலங்காரமணி சிவஸ்ரீ ரவீந்திரராஜக் குருக்கள் தலைமையில் தினமும் காலை, மாலை திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

# வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் சிறந்த முறையில் மறுசீரமைப்பு

## – ஆளுநர் செயலகம் விசேட அறிக்கை




(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் சிறந்த முறையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் செயலக ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களின் இடமாற்றம் ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது. பல ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் பணிபுரியாது குறித்த ஒரு பகுதியில் பல வருடங்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இதன் காரணமாக, குறித்த சில பின்தங்கிய பாடசாலைகளில் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இந்நடைமுறைப்பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி யூலை 2011 இல் இப்பிரச்சினையை கையாள்வதற்காக ஒரு குழுவை நியமித்திருந்தார்.

இக்குழுவானது தமது அவதானங்களை சமர்ப்பித்திருந்தது. அதன் பிரகாரம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பிரதேசங் களிலிருந்து இடம்பெயர்ந்த பெருமளவு எண்ணிக்கையான ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் மற்றும் அதன் சுற்றுப்புற பிரதேசங்களில் வசிப்பது கண்டறியப்பட்டது. இவ் ஆசிரியர்கள் வன்னிக்குத்திரும்பிச் செல்வதை விரும்பவில்லை. தற்போதைய நிலைமை அவர்களுக்கு மிகவும் ஏற்புடையதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, வன்னிப் பிரதேசத்தில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவது கண்டறியப்பட்டது. வன்னிப் பிரதேசத்தின் கல்வித் தராதரத்தை மேம்படுத்துவதற்கும் இப்பிரதேச மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளவதற்கும் நீண்டகாலமாக நிலவி வந்த இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டதுடன் இடமாற்றங்கள் தொடர்பாக கவனிப்பதற்கு மூன்று குழுக்களும் நியமிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் ஆசிரியர்களுக்கு தமது நிரந்தர பணியிடங்களுக்குச் செல்வதற்கு மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஏறக்குறைய 90 வீதமான ஆசிரியர்கள் இந்நடைமுறையை பின்பற்றினர். 10 வீதமானவர்கள் மட்டுமே பல்வேறு காரணங்களுக்காக எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். தற்போது இப் 10 வீதமான ஆசிரியர்களின் கருத்துக்களும் அறியப்பட்டு வருகின்றது.

இவர்களின் குடும்பப் பின்னணிகளையும் கருத்திற்கொண்டு மேலும் சில காலம் தமது பழைய பாடசாலைகளிலேயே கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. சில தனியார் ஊடகங்கள் வழங்கும் தவறான செய்திகளை கேட்டு தவறான வழியில் செல்ல வேண்டாம் என இதன் மூலம் நர்ம் மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திகதி நீடிப்பு

தேசிய புகையிலையொழிப்பு தினத்தை யொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினால் அறிவிக்கப்பட்ட திறந்த மற்றும் மாணவர்களுக்கான சுவரொட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளுக்கான முடிவுத் திகதி 21.05.2012 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# பதிவிருக்கப் பெட்டகம்

நான் யார்? என் அடையாளம் எது? என்று கேட்டுக்கொண்டு விடை காண முயல்வது சற்று சிரமமான விஷயம்தான். ஆனாலும் எல்லா மனிதனுக்கும் அடையாளங்கள் இருக்கத்தான் செய்கின்றன. மொழி, கலாசாரம், வாழிடம், பாரம்பரியம் ஆகியவற்றினூடாக மனிதன் தன்னை அடையாளப் படுத்திக் கொள்வது தவறாகவும் இருக்க முடியாது. ஆனால், அதையே தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, அந்த எல்லைகளுக்குள் நின்றுவிடுவது, நாம் மனிதராக விரிந்து வளர உதவாது. எமது மதம், எமது மொழி, எமது தேசம், எமது நாடு என்று வெறிகொண்டு விட்டால் மற்றவர்களை அழித்தொழிப்பதே நியாயம் என்றாகி விடுவதை வரலாற்றில் பார்த்து வருகிறோம். **– E.W.அதிகாரம்**

நம்சூழலில்கலைஞனாக வாழ்வது என்பது எதற்காகவென்றால் சமூக வாழ்வில் ஒரு மேலான இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, அதன்மூலம் சமூகத்தின் மீது அதிகாரம் பெறுவதற்கு, அதன்மூலம் வாழ்வின் நடைமுறைத் தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு. இப்படித்தான் அல்லது பெரும்பாலும் இந்த நோக்கத்திற்காகத் தான் இங்கே கலை பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு அரசியல்வாதியைப் போல, ஓர் அதிகாரியைப் போல, ஒரு மத குருவைப் போல, அவர்கள் எவ்வகைப்பட்ட மேலாதிக்கத்தைத் தங்கள் அரசியலின் மூலமும், அதிகாரத்தின் மூலமும், மதத்தின் மூலமும் நிறுவ முற்படுகிறார்களோ அதே வகைப்பட்ட அதிகாரத்தைத் தமது படைப்பின் மூலம் நிறுவ முற்படுபவர்களாகவே இங்கே கலைஞர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்ள விரும்புவோரில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். வெவ்வேறு விதமான எதிரும்புதிருமான கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் கொண்டிருந்தாலும் கூட இவ்விஷயத்தில் பலரையும் நம்மால் உதாரணம் காட்டிவிட முடியும். **– தேவிபாரதி**

இப்படிச் சொல்வது அராஜகமாக, சங்கடமாக இருக்கிறது – ஆனால் உண்மையில் நான் பயத்தை உணர்ந்ததே இல்லை. அந்த வார்த்தையின் அர்த்தமே எனக்குத் தெரியாது. கடந்த சில நாட்களாக நான் அனுபவிக்கும் உணர்வுக்கு என்ன பெயர் என்றும் தெரியவில்லை. என் மகனைப் பற்றிய செய்தி ஏதும் தெரியாத துக்கம் என்னைச் சூழ்ந்து கொண்டு எனக்குள் இறங்குகிறது. அதுதான் பயமா? தெரியவில்லை. ஒரு சில விஷயங்கள் நமக்கு நடக்காது என்று நம்பிக் கொண்டிருக்கும் வரை, பயத்தை உணர முடியாது என்று மட்டும் எனக்குத் தெரியும். மற்றவர்களைக் கொல்வதை, சித்திரவதை செய்வதை, முடமாக்குவதை கேள்விப்படலாம்; ஆனால் அதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை. நேரடியாக நாம் தாக்கப்படும்போது நாம் நினைத்தது தவறு, நாம் விதிவிலக்கு இல்லை என்று புரியும்போது பயம் ஆரம்பமாகிறது. **– நிழல்களின் உரையாடல்**

...எழுத்தாளனாகிய என்னைப் பொறுத்தவரை, எழுதும் வாய்ப்புப் பறிக்கப்பட்டிருப்பதானது மரணதண்டனையை விடக் குறைந்ததல்ல. எவ்விதக் குற்றமும் இழைக்காமல் ஊறுவிளைவிக்கப்பட்டிருப்பவன் நான் என்ற சித்திரத்தை உங்கள் முன் நான் வைக்க விரும்பவில்லை. ஒரு தருணத்தில் எதைப் பேசுவது சௌகரியமானதோ அதை விடுத்து உண்மையைப் பேசுகின்ற ஒரு மிகவும் அசௌகரியமான பழக்கம் என்னிடம் உள்ளது என்பதை நான் அறிவேன்...
**– எவ்கெனி ஸாமியாடின் ஸ்டாலினுக்கு எழுதிய கடிதத்தில்**

மானுடவாழ்க்கை என்பது மிகப்பெரிய குன்று. அது நேற்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. நாளையும் இருக்கும். காலந்தோறும் அந்தக் குன்றின் மீதேறி நடந்துகொண்டே இருக்கிறார்கள் மனிதர்கள். அதைச் சுற்றிசுற்றி வலம் வருகிறார்கள். மழைமேகங்களைப்போல. அதன் பச்சை, அதன் பூக்கள், அதன் செறிவு அனைத்திலும் மனம் பறிகொடுத்து அழகைச் சுவைத்தவாறு போய்க்கொண்டே இருக்கிறார்கள். களைப்பாக உணரும்போது அமர்ந்து ஓய்வெடுக்கிறார்கள். புத்துணர்ச்சி பெற்றதும் மீண்டும் பயணத்தைத் தொடர்கிறார்கள். ஆயுள் முடிந்ததும் மறைந்துபோகிறார்கள். அப்போது வேறொரு புள்ளியிலிருந்து பயணத்தைத் தொடர்ந்தவர்கள் அங்கே வந்தடைந்துவிடுகிறார்கள். குன்றின் தோளிலேறியும் உச்சியைத் தொட்டும் விளையாடிக் களிக்கும் மேகங்கள் சட்டென ஒரு தருணத்தில் மழையெனப் பொழிகிறது. இலக்கியமே அம்மேகங்கள். ஒவ்வொரு நாளும் புதியபுதிய மேகங்கள். புதியபுதிய மழை. **– பாவண்ணன்**

# உலக ஜனநாயகம் நெருக்கடியான சூழலில்



(புதுடில்லி)

உலக ஜனநாயகம் நெருக்கடியான சூழலில் இருக்கிறது. பல்வேறு வகையான எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டியுள்ளது என நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில், பிரதீபா பட்டீல் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆவது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி பிரதிபா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய ஜனநாயகத்தின் சாதனை மகத்தானது. அதற்கு, எந்த வகையிலும் சீர் குலைவு ஏற்பட அனுமதிக்கக்கூடாது. தறபோது பெரும்பாலான அரசுகள் கூட்டணி அரசுகளாக உள்ளன. பல்வேறு கட்சிகள் இணைந்து தான் சட்டத்தை இயற்ற வேணடியுள்ளது.

மேலும் சமீபகாலமாக பிராநதிய மனப்பான்மையும் அதிகரித்துள்ளது. ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு தடையாக உள்ள சவால்களை முறியடித்து ஆரோக்கியமான, துடிப்பான ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும்.

இந்த விஷயத்தில் கவனமாகவும் உறுதியுடனும் செயற்பட வேண்டும். ஜனநாயகத்தின் அடித்தளமாக தேர்தல்கள் உள்ளன. எனவே தேர்தல் நடைமுறைகளில் கவனம் செலுத்த வேண்டும். எந்தவித முறைகேடும் ஊழலும் இல்லாத வகையில் தேர்தல் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். நாடாளுமன்றில் நடக்கும் விவாதங்களில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் விவாதங்கள் மூலமே, பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என ஜனாதிபதி பிரதீபா தெரிவித்தார்.

இதேவேளை அனைத்து கட்சி உறுப்பினர்களின் சிறப்பு விவாதம் முடிவடைந்தபின் நாடாளுமன்ற கௌரவத்தை காக்க வேண்டும் என இரண்டு சபைகளிலும் குரல் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




## நாடாளுமன்ற 60 ஆவது கொண்டாட்டத்தில் முதல் நாடாளுமன்ற எம்.பி. புறக்கணிப்பு



(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் 60 ஆவது ஆண்டையொட்டி, முதல் நாடாளுமன்ற முன்னாள் எம்.பிக்கள் இருவர் கௌரவிக்கப்பட்டனர். பாராட்டு விழாவில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, குமாரமங்கலத்தை சேர்ந்த தமிழ் எம்.பி. புறக்கணிக்கப்பட்டதால் தமிழக மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர்.

கடந்த 1952 மே 13 இல் நாடாளுமன்ற முதல் கூட்டம் நடந்தது. நேற்றுமுன்தினம் 60 ஆவது ஆண்டு தினத்தையொட்டி, நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தில் முதல் நாடாளுமன்றத்தைச் சேர்ந்த முன்னாள் மூத்த எம்.பிக்கள் கௌரவிக்கப்பட்டனர். மணிப்பூர் மாநிலம் உக்ருலை சேர்ந்த ரிஷாங் கெய்சிங்க், ரோஷம் லால் ஜாங்டேவுக்கு பாராட்டு தெரி விக்கப்பட்டது.

கடந்த, 1948ஆம் ஆண்டில் எம்.பி.யாக இருந்த, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டை சேர்ந்த காளியண்ண கவுண்டர் இதுபற்றித் தெரிவித்தாவது, இந்தியா சுதந்திரத்துக்கு பின், 1948இல் உருவான அரசியல் நிர்ணய குழுவில், அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு, ராஜேந்திர பிரசாத் ஆகியோர் கொண்ட 207 பேர் நியமிக்கப்பட்டனர். அதில் நானும் ஒருவனாக இருந்தேன். முதல் எம்.பி.யாக நியமிக்கப்பட்டவர்களில் நான் மட்டுமே உயிரோடு உள்ளேன். இதேவேளை தமிழன் என்ற ஒரே காரணத்தால், 60 ஆவது ஆண்டு நாடாளுமன்ற பாராட்டு விழாவில் காளியண்ண கவுண்டர் புறக்கணிக்கப்பட்டதாகவே நாங்கள் கருதுகிறோம் என அவரது உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானில் பயிற்சிக்கு சென்றவர்கள் மறுவாழ்வுக்காக இந்தியா திரும்பினர்

ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு அறிவித்த மறுவாழ்வு கொள்கையால் பாகிஸ்தானில் ஆயுதப் பயிற்சி பெறச் சென்ற 109 வாலிபர்கள் அமைதியாக வீடு திரும்பியுள்ளனர். ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா தலைமையிலான அரசு கடந்த 2010 நவம்பரில் மறுவாழ்வுக் கொள்கை ஒன்றை மத்திய அரசின் ஒப்புதலுடன் அறிமுகம் செய்தது.

இதையடுத்து, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு ஆயுதப் பயிற்சிக்காக சென்றிருந்த 1,300 வாலிபர்கள், தாங்கள் வன்முறைப் பாதையைக் கைவிட்டு அன்றாட வாழ்க்கைக்கு திரும்ப விரும்புவதாக பல்வேறு வழிகளில் தகவல் தெரிவித்தனர்.

இவர்களில் 109 பேர், பல்வேறு வழிகளில் அமைதியாக வீடு திரும்பியுள்ளனர். அவர்களைப் பற்றிய விவரங்களை வெளியிட்டால், அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் விவரங்களை தெரிவிக்க முடியாது என்று அம் மாநில மூத்த உளவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மதுரை ஆதீனமும் நித்தியானந்தாவும்



(மதுரை)

மதுரை ஆதீனத்தில் நித்தியானந்தாவின் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆதீனங்கள் 13 பேரில் மூன்று பேர் மட்டுமே வந்தனர். மற்றவர்கள் விலகி விட்டனர். அவர்களின் முதல் போராட்டமே காமெடியாகி விட்டது என நித்யானந்தா தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்றுமுன்தினம் அவர் மேலும் தெரிவித்தாவது, மதுரையில் ஆதீன மீட்பு குழுக் கூட்டத்தில் பேசியவர்கள், வன்முறையை தூண்டும் வகையில் பேசி கொலை மிரட்டலும் விடுத்தது கண்டனத்திற்குரியது.

மேலும் நான் திருநீறு பூசுவதில்லை என்கின்றனர். நான் பூசித்தான் வருகிறேன். வியர்வையில் அழிந்து விடுகிறது. ஆதீன மடத்தை வளர்க்கும் மிகப்பெரிய பொறுப்பு எனக்கு உண்டு. அதற்கான வயசும் இருக்கிறது. எதிர்ப்பாளர்களான 13 ஆதீனங்களில் பெங்களூர் நீதிமன்றில் நான் ஆண்மை இல்லாதவன் என்று கூறவில்லை.

ஆண், பெண் தன்மைக்கு அப்பாற்பட்ட ஆண் தன்மை உடையவன் என்றுதான் சொன்னேன். திருநங்கை என்ற வார்த்தையை எங்கேயும் பயன்படுத்தவில்லை என்றார்.


இதேவேளை மடத்தைவிட்டு நித்யானந்தாவை வெளியேற்றுவது குறித்து மதுரையில் மடாதிபதிகள் ஆலோசனை நடத்திய அதேநேரத்தில் மடத்தில் மதுரை ஆதீனமும் நித்யானந்தாவும் பக்தர்களுக்கு திருநீறு வழங்கி கொண்டிருந்தனர்.

## மாவோயிஸ்டுகளின் தாக்குதல்

சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். வட மாநிலங்களில் மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் அதிகரித்து கொண்டே செல்கிறது. அரசு அதிகாரிகளை கடத்திச் செல்வதும் பாதுகாப்புப் படையினர் மீது திடீர் தாக்குதல் நடத்துவதும் அன்றாட வழக்கமாகி விட்டது.

சத்தீஸ்கர் காட்டுப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படையினர் மீது மாவோயிஸ்டுகள் அதிரடியாக தாக்குதல் நடத்தியதில் சம்பவ இடத்திலேயே 6 பேர் பலியாயினர்.

## தேர்தலால் கோயில் உண்டியல் நிரம்பவில்லை



(நகரி)

திருப்பதி தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, பொலிஸார் ஆங்காங்கே சோதனை செய்வதால், திருப்பதி கோவில் உண்டியலில் செலுதத காணிக்கைப் பணத்தை கொண்டு வர பக்தர்கள் தயங்குகின்றனர்.

திருப்பதி சட்டசபைத் தொகுதிக்கு, எதிர்வரும் ஜூன், 12 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. கடந்த 10 நாட்களாக தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரம் நடந்து வருகிறது. திருப்பதி நகரை சுற்றி சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தி, பொலிஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்காளர்களுக்கு மது, பணம் பட்டுவாடா செய்யப்படுகிறதா என தேர்தல் அதிகாரிகளும், பொலிஸாரும் கண்காணித்து வருகின்றனர். திருமலையில் வெங்கடேச பெருமாளுக்கு, பிரார்த்தனை செய்துகொள்ளும் பக்தர்கள், உண்டியலில் செலுத்த இலட்சக்கணக்கில் கொண்டு வரும் பணமும், பொலிஸாரின் சோதனையில் சிக்கிக் கொள்கிறது. இதனால் பக்தர்கள் காணிக்கை செலுத்துவதை தள்ளிப்போட்டு வருவதால், உண்டியல் வருமானம் குறைநதுள்ளது என கோயில் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## பால் தாக்கரேக்கு மூச்சுத் திணறல்



சிவசேனா தலைவர் பால்தாக்கரே மூச்சுத் திணறல் காரணமாக நீண்ட நாட்களாக அவதிப்பட்டு வந்தார்.

இதனால் மும்பை பந்த்ரா பகுதியில் அமைந்துள்ள லீலாவதி வைத்திய சாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிவசேனா கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது பால் தாக்கரே குணமடைந்து வருவதாகவும் விரைவில் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை முடிந்து வீடு திரும்புவார் என மற்றொரு மூத்த உறுப்பினர் தெரிவித்தார்.

மராட்டிய மாநிலத்தில் பால்தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி வலிமையான கட்சியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரப்பன் சமாதி மந்திரவாதிகள் தோண்டினர்?

(மேட்டூர்)



சந்தன கடத்தல் வீரப்பன் சமாதியை கடந்த இரண்டு நாட்களுக்கு முன் இரவு வேளை மர்ம கும்பல் தோண்டி விட்டு மீண்டும் மண்ணை போட்டு மூடியுள்ளது.

மந்திரவாதிகள் கைவரிசையாக இருக்குமோ என்று கிராம மக்கள் சந்தேகத்தால் பீதியடைந்து உள்ளனர். தர்மபுரி மாவட்டம் பாப்பாரபட்டி அருகே 2004 ஒக்டோபர் 18 இல் சந்தன கடத்தல் வீரப்பனை தமிழக சிறப்பு அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்றனர். வீரப்பன் உடல் சேலம் மாவட்டம், மூலக்காடு கிராமத்தில் மேட்டூர் அணை கரையோரம் பொதுப் பணித்துறை நிலத்தில் புதைக்கப்பட்டது.

வீரப்பன் பிணம் புதைக்கப்பட்டு, எட்டு ஆண்டுகளாகி விட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை அப்பகுதியில் சென்ற மூலக்காடு கிராம மக்கள் வீரப்பன் சமாதி தோண்டி போடப்பட்டு உள்ளதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். தோண்டப்பட்ட தினம் இரவு தேய்பிறை அஷ்டமியாகும். தேய்பிறை அஷ்டமியின் போது, துஷ்ட தேவதைகளுக்கு சக்தி அதிகரிக்கும். மந்திரவாதிகள், தங்களுக்கு சக்தி கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஏற்கனவே, இறந்த சக்தி வாய்ந்த மனிதர்களின் எலும்புகளை வைத்து பூஜை நடத்துவதுண்டு. அது போல வீரப்பன் சமாதியையும் மந்திரவாதிகள் யாரேனும் தோண்டி எலும்புகளை எடுத்து சென்றிருக்க வாய்ப்புள்ளது என கிராம மக்கள் சிலர் தெரிவித்தனர்.

# தமிழ் தொலைக்காட்சி தொடர்களை மலேசியாவில் தடை செய்யக்கோரிக்கை





வன்முறைக்காட்சிகள் அடங்கிய தொலைக்காட்சித் தொடர்களை தடை செய்ய வேண்டும் என மலேசிய நுகர்வோர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மலேசியாவில் 28 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் வசிக்கின்றனர். இவர்களும் தொலைக்காட்சி தொடர்களைப் பார்க்கின்றனர்.

இதுகுறித்து மலேசியாவின் பினாங்கு பகுதி நுகர்வோர் அமைப்பின் நிர்வாகி என்.வி.சுப்பாராவ் கூறியதாவது, தமிழ் அலைவரிசைகளில் ஒளிபரப்பாகும் தொலைகாட்சி தொடர்களில், பெரும் பாலும் வன்முறைக் காட்சிகள்தான் இடம் பெறுகின்றன. இதை பார்க்கும் இளைஞர்கள் கிரிமினல்களாக மாறும் நிலை உள்ளது. அது மட்டுமல்லாது பெண்களும் குடும்பத்தை கவனிக்காமல் தொலைக்காட்சி பார்ப்பதில் பொழுதை கழிக்கின்றனர். எனவே தொலைக்காட்சி தொடர்களை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். வன்முறை காட்சிகள் அடங்கிய தொடர்களை அரசு தணிக்கை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

# மணிலாவில் வீடற்ற 10 ஆயிரம் பேர்



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் சேரிப்பகுதியொன்றில் பாரிய தீ பரவியதால் சுமார் 800 குடிசைகள் அழிந்துள்ளன. இதனால் இருவர் காணாமல் போனதுடன் சுமார் 10,000 பேர் வீடற்றவர்களாகியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஏற்பட்ட இத்தீயிலிருந்து தப்புவதற்கு பலர் சாம்பல் நிறைந்த தண்ணீருக்குள் பாய்ந்தனர்.

தீயணைப்புத் துறையினர் தீயை அணைப்பதற்கு போதிய தண்ணீரைப்பெற்றுக்கொள்ள அவகாசம் இருக்காததால் கரையோர காவல் படையினர் அழைக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். குடியிருப்புகளை இழந்த மக்கள் அருகிலுள்ள விளையாட்டு அரங்கு ஒன்றில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

## ஆப்கான் சமாதான பேச்சுவார்த்தையாளர் காபூல் நகரில் சுட்டுக்கொலை

உலகச் செய்திகள்



ஆப்கானிஸ்தானில் சிரேஷ்ட சமாதான பேச்சுவார்த்தையாளரான அர்சலா ரஹ்மானி, காபூல் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இக்கொலை தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய்க்கு பேரிடியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் தலிபான் தளபதிகளை நெருங்கக்கூடிய முக்கிய பிரமுகராக ரஹ்மானி விளங்கினார்.

தலிபான்களின் ஆட்சியில் அமைச்சராக விளங்கிய அர்சலா ரஹ்மானி, பின்னர் ஆப்கானிஸ்தான் உயர் சமாதானப் பேரவையின் முக்கியஸ்தராக விளங்கினார். அச்சபையின் தலைவரான புர்ஹானுதீன் ரப்பானி கடந்த வருடம் தற்கொலைத் தாக்குதலொன்றில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் காலை ரஹ்மானி தனது வேலைக்கு சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரித்தானிய படைவீரர்கள் இருவர் ஆப்கானிஸ்தானில் சுட்டுக் கொலை

ஆப்கானிஸ்தான் தேசிய பொலிஸ் படையைச்சேர்ந்த ஒருவர் பிரித்தானிய படைவீரர்கள் இருவரை சுட்டுக் கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் தென்பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆப்கான் பாதுகாப்பு அமைச்சினை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் 2001 ஆம் ஆண்டில் இருந்து இது வரை இடம்பெற்ற பிரித்தானிய இராணுவத்தினரின் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 414 ஆக பதிவாகியுள்ளது. பொலிஸ் உடையுடுத்த ஆயுததாரி இந்தத் துப்பாக்கி பிரயோகத்தை மேற் கொண டிருக்கலாம் என நேட்டோ படையினரின் பேச்சாளர் இதற்கு முன்னர் கூறியிருந்தார். எனினும் தேசிய பொலிஸில் ஒருவருடங்களாக கடமையாற்றிய ஒருவரே இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக ஆப்கானிஸ்தான் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எனினும் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணங்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஓரினச் சேர்க்கையாளர்களும் அமெரிக்கத் தேர்தலும்






ஆணும், ஆணும் அல்லது பெண்ணும், பெண்ணும் திருமணம் செய்து கொண்டு வாழ்வதை அங்கீகரிக்க வேண்டும் என்று பல நாடுகளில் ஓரின சேர்க்கையாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஓரினச் சேர்க்கை திருமணத்துக்கு சில நாடுகள் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கி உள்ளன. எனினும் இது சரியா தவறா என்ற விவாதம் உலகளவில் நடந்து வருகிறது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் பிரசாரத்தில், ஓரினச் சேர்க்கை திருமணம் பற்றிய விவாதம் பரபரப்பாக நடந்து வருகிறது.

இதுவரை ஓரினச் சேர்க்கை திருமணத்தை எதிர்த்து வந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இப்போது திடீரென ஆதரவு தெரிவித்துள் ளார். மீண்டும் ஜனாதிபதி தேர் தலில் போட்டியிடுவதால் தேவையில்லாத வாக்குறுதிகளை ஒபாமா கூறிவருகிறார் என்று எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்நிலையில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மிட் ரோம்னி, ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

விர்ஜினியாவில் உள்ள பல் கலைக்கழகத்தில் மிட் ரோம்னி பேசுகையில், அமெரிக்க கலாசாரத்தையும், குடும்ப பந்தத்தையும் சீர்குலைக்கும் வகையில் ஓரினச் சேர்க்கை திருமணம் உள்ளது. இதைக் கடுமையாக எதிர்க்கிறேன். திருமணம் என்றால் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் செய்து கொள்வதுதான். இந்த அடிப்படையை மீறிய எதுவும் திருமணம் ஆகாது என்று தெரிவித்தார்.



நியூயோர்க் ஜோன் எப் கென்னடி சர்வதேச விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட எண்டர்பிரைசஸ் விண்கலம் அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்வதற்காக பிரிக்கப்பட்டது.

# சீனாவில் பலத்த மழை; பலியானவர்கள் 40 ஆக உயர்வு



சீனாவின் கான்சு மாகாணத்தில் ஏற்பட்ட பலத்த மழை வெள்ளத்தில் 40 பேர் பலியாகினர். சீனாவின் வடமேற்கு பகுதியான கான்சு மாகாணத்தின் மலைகள் நிறைந்த மின்சியான் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஆறு நகரங்களில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. பல வீடுகளும், மருததுவமனை, பள்ளிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் தேசிய நெடுஞ் சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளம் காரணமாக ஏழாயிரம் ஹெக்டேயர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது வரை இந்த மழைக்கு 40 பேர் பலியாகியுள்ளனர், 18 பேரை காணவில்லை. இங்குள்ள 30 ஆயிரம் பேர் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்புப் படையினர் போர்வைகளையும், உடைகளையும் வழங்கி வருகின்றனர்.

# 63 ஆண்டுகால நண்பன் திருட்டு



இங்கிலாந்தில் தனிநபர் ஒருவர் ஆசையாக 93 வருடங்கள் நண்பனாக வளர்த்து வந்த ஆமையை மர்ம நபர்கள் திருடி சென்று விட்டனர். ஆமையை பிரிந்து தவிக்கும் உரிமையாளர், ஆமையை கொடுத்து விடுங்கள், பரிசுத் தருகிறேன் என உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இங்கிலாந்தின் எஸ்சக்ஸ் பகுதியில் உள்ள டன்மோவில் வசிப்பவர் ரெக்ஸ் காக்ஸ்டர்(வயது -74). இவருடைய மனைவி ஜேன். இவர்களுக்கு 7 பேரக் குழந்தைகள் உள்ளனர். இவர் செல்லமாக ஆமை ஒன்றை வளர்த்து வருகிறார். அதற்கு டிம்மி என்றும் பெயர் வைத்துள்ளார்.

கடந்த மாத இறுதியில் விடுமுறைக்காக அனைவரும் சுற்றுலா சென்று விட்டு மே 2ஆம் திகதி வீடு திரும்பினர். விட்டுப் போன இடத்தில் டிம்மியை காணவில்லை. வீடு முழுக்க தேடியும் கிடைக்கவில்லை. அது திருட்டுப் போனதை அறிந்து அதிர்ச்சி அடைந்து, அதனைத் திருப்பிப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு 11 வயதாக இருக்கும் போது 30 வயது நிரம்பிய குறித்த ஆமையை வீட்டிற்கு கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர், 63 ஆண்டுகளாக அவனைப் பிரியாமல் வாழ்ந்து வந்தேன். இப்போது அவனை யாரோ திருடிவிட்டார்கள். நான் இல்லாமல் அவன் எப்படி உயிர் வாழ போகிறான் என்று பயமாக இருக்கிறது. டிம்மி காணாமல் போனது என்னை விட என் பேர குழந்தைகளை அதிகம் பாதித்துள்ளது. திருடர்கள் அவனுக்கு சரியான நேரத்தில் ஆகாரம் கொடுக்கிறார்களா, பத்திரமாக பார்த்துக் கொள்கிறார்களா என்று தெரியவில்லை என கவலை தெரிவித்தார்.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17-05-2012 முதல் 28-05-2013 வரை

## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: ம, மி, மு, மெ, மோ, ட, டி, டு, டே உள்ளவர்களுக்கும்)

பகைவர்களைக் கூட தங்கள் வெற்றிக்கு படிக்கட்டுகளாக மாற்றிக் கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!

தங்கள் கொள்கைகளை யாருக்காகவும், எதற்காகவும் விட்டுக்கொடுககாதவர்கள் நீங்கள், நினைத்ததை முடிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு மேலோங்கியிருக்கும். சூரியனின் ஆதிக்கத்திற்கு உரிய இராசியில் நீங்கள் பிறந்திருப்பதால் தலைமைப் பதவிக்கு நீங்கள் தகுதியானவர் என்பதை நிரூபித்துக்காட்டுவீர்கள்.

சப்தமாதிபதியாக சனி விளங்குவதால் குடும்பம் திருப்திகரமாக அமைவது அரிது. இரண்டு சிம்ம இராசிக்காரரகள் ஒரே இல்லத்தில் வசித்தாலும், உடன்பிறப்பாக இருந்தாலும், காரிய தடைகள் உருவாகலாம்.

உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக குரு விளங்கி, இப்பொழுது 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். பத்தாமிடத்து குரு பதவியில் ஒரு மாற்றத்தை கொடுக்கும் என்பது முன்னோர் வாக்கு. அது கேதுவுடன் சேர்ந்து சஞ்சரிக்கப்போகிறது. எனவே ராகு திசை, கேது திசை நடப்பவர்களும், ராகு புத்தி, கேது புத்தி நடப்பவர்களும் குரு திசை மற்றும் குரு புத்தி, சுக்ர புத்தி நடப்பவர்களும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

### குரு பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு இதுவரை ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 17.5.2012 முதல் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். குரு உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடஙகளுக்கு அதிபதியாக விளங்குகிறார்.

ஞாயிற்றுக்கிழமையன்று அவிட்ட நட்சத்திரமும் வரும் நாளில் செய்யும் குரு ப்ரீதி நல்ல பலன்களை வழங்கும். அன்னதான வைபவங்கள் மூலம், பத்தாமிடத்து குருவின் சஞ்சாரத்தால் பதவி மாற்றம் கூட நல்ல மாற்றமாக அமையும்.

### பத்தாமிடத்தில் வந்த குரு!

உங்கள் இராசிக்கு 5, 8இற்கு அதிபதியான குருபகவான் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். வழக்கமாக சஞ்சரிப்பதற்கும்; இப்போது சஞ்சரிப்பதற்கும் வேறுபாடு உள்ளது. இப்பொழுது சஞ்சரிப்பது பகைவனான சுக்ரன் வீட்டில்.

உங்கள் சுய ஜாதகத்தில் இதே அமைப்பில் குரு இருந்தாலும் அல்லது பகை கிரகத்தின் பாதசாரத் [illegible] சஞ்சாரம் செய்திருந்தாலும், இ[illegible]ழுது நல்ல பலன்களை அள்ளிக்[illegible]ப்பார். மேலும் இப்போது செல்லும் குரு பகவான் கேதுவுடன் சேருகிறார். பாம்பு கிரகத்தின் சேர்க்கை ஏற்படும்பொழுது, பலன்கள் ஸ்திரமாக இருக்காது. ஏற்றமும், இறக்கமும், இன்பமும், துன்பமும் வந்து வந்து போகலாம். அவற்றை சரி செய்ய சர்ப்ப சாந்தியை செய்து கொள்ளலாம்.

தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் தொழில் மாற்றம், இடமாற்றம் உருவாகலாம். சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு திருப்தியற்ற சூழ்நிலை ஏற்படலாம்.

பத்தாமிடம் என்பது தொழில் ஸ்தானம், ஜீவன ஸ்தானம் என்றாலும் கூட, அரசு பணி, சேவை, புண்ணியம் செய்யும் அமைப்பு, தெய்வ வழிபாடு, தத்துப்பிள்ளை, கௌரவம், புகழ், வாணிபம், திரவியம் தேடுதல், காலில் தொடைப்பகுதி போன்றவற்றை குறிக் கும் இடமாகவும் அமையும்.

தொழில், உத்தியோகத்தில் நிலையற்ற தன்மை, துடிப்போடு பணி புரிந்தாலும் மேலதிகாரிகளின் அனுசரிபபின்மை, சொன்ன சொல்லை நிறைவேற்ற இயலாத நிலை, கால் மற்றும் தொடைப்பகுதிகளில் வலி, பிறருக்காக சில காரியங்களை விட்டுக்கொடுத்தல், தியாகம் செய்தல், திரவியம் தேடும் முயற்சியில் புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொள்ளுதல் போன்றவை உருவாகும்.


### குருவின் பார்வை பலன்கள்!

குருவின் பார்வையால் உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே குடும்பத்தில் குதூகலங்கள் அதிகரிக்கப்போகினறன. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தனவரவு பெருகும்.

பிறர் போற்றும் அளவிற்கு நல்ல காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள். கட்டுப்படாத சகோதரர்கள் இப்போது கட்டுப்படுவர். ஆச்சரியப்படத் தக்க பதவிகள் கிடைக்கும். பிரிந்தவர்கள் வந்திணைவர். குடும்பச்சுமை கூடும். கோவில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தை புனிதப்படுத்துவதால் தாயின் உடல் நலம் சீராகும். வாகன வசதிகள் வந்து சேரும். வீடு கட்டி குடியேறும் யோகம சிலருக்கு கிடைக்கும். உங்களைப் பற்றி உறவினர்களிடம் அவதூறாக சொல்லியவர்கள் இப்பொழுது விலகுவர்.

இரும்பு, எந்திரம், ரியல் எஸ்டேட், மருந்து, மரம் போன்ற துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வசதிகள் அதிகரிக்கும். உடல் நிலையில் முன்னேற்றம் கூடும். உற்சாகத்தோடு பணி புரிய முன்வருவீர்கள். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களை ஒழுங்கு செய்ய வருமானம் வரும். எதிர்ப்புகள் அகலும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.



### வாட்டத்தை போக்குமா வக்ர குரு

ரிஷப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12-10.2012 முதல் 6-02-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப்பொறுத்த வரை பஞ்சம, அஷ்டமாதிபதியாக குரு விளங்குவதால் நன்மையும், தீமையும் கலந்தே கொடுப்பார். வாழ்க்கைத்தேவைகள் கடைசி நேரத்திலேயே பூர்த்தியாகும். நேசித்தவர்கள் உங்களை விட்டு விலகினாலும், யோசிக்க வேண்டாம். ஆசைப் பட்டபடியே அடுத்த நண்பர்கள் அறிமுகமாகி விடுவார்கள்.

குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். பெண் குழந்தைகள் அவைகளாக சில முடிவுகளை தேர்ந்தெடுக்கலாம். அதற்கு நீங்கள் அங்கீகாரம் செய்வதுபோல் ஆகிவிடும். பூர்வீக சொத்துகளில் பிரச்சினைகள் வரலாம். எனவே நெட்டையோ, குட்டையோ என்று பார்க்காமல் வழக்குகளை விரைவில் முடித்துக்கொள்வது நல்லது.

தேக நலனிலும் நீங்கள் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். தீட்டிய திட்டங்கள் நிறைவேற தென்முக கடவுளை இன்முகத்தோடு வழிபடுவது நல்லது.

### சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு...

இந்த குரு பெயர்ச்சியால் குழப்பங்கள் அகலும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்கால தேவைகள் ஒவ்வொன்றாக பூர்த்தியாகும். பதவிகளில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கூடும். புதிய திருப்பங்கள் ஏற்படும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலமிழந்தவர்கள் தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் செல்வச்செழிப்பில் மிதக்கலாம். குறிப்பாக நாக சாந்தி செய்வது நன்மையைத் தரும். (தொடரும்)

# கஷ்டமான 10 கட்டளைகள்!

பெற்றோர்களின் நிழலில் இருக்கும் வரை, சகோதர சகோதரிகளுக்கிடையே நிலவி வந்த பாசம், நேசம் எல்லாம், அவரவர்கள் மனைவி குடும்பம் குழந்தைகள் என்று கிளை விட்டபின், பாசத்தில் ஒரு கீறல், பிணைப்பில் ஒரு பிரிவு, அணைப்பில் ஒரு பாசாங்கு, என்று நூலிழையாக நுழைந்து, அகழியாகப் பள்ளம விழுந்து விடுகிறது. இது எப்படி நிகழ்கிறது?

முக்கியமான காரணம், பெற்றோர் விட்டுச் சென்ற சொத்து. இவைதான், உறவின் தரத்தை உரசிப் பார்க்கும் உரைகல். சொத்துப் பிரிவினை, பல வீடுகளில், உறவையும் சேர்த்தே பிரித்துவிடுகிறது. இது ஏற்படுத்தும் சலசலப்பு, புற்றுநோய் போல் அகத்தைப், பலகாலம் அரித்த பின் முகத்தில் கோபத்தையும், விரோதத்தையும், சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும் அப்பட்டமாகக் காட்ட வைக்கிறது.

இவைகளை எப்படித் தவிர்க்கலாம்?

முன்னோர்கள் விட்டுச் செல்லும் சொத்துக்களுக்கு, நாம் அடிமையாகி விடாமல், அவைகளை நமக்கு, அடிமைகளாக, ஆக்கிக் கொள்ள வேண்டும். கொஞ்சம் சிரமம்தான், ஆனால் முயன்று பார்ப்பதில் தவறில்லையே?

நாம் சேர்த்த சொத்துக்கு நாம் அடிமையாவதே, வெட்கத்துக்குரிய விஷயம். இதில் அடுத்தவர் சேமிப்புக்கு நாம் அடிமையாவது, அதை விடக் கேவலம். ஒரு நோய் நம்மை அணுகாமல் நம்மை நாம் எப்படி பாதுகாத்துக் கொள்கிறோமோ, அதை விடக் கவனமாகச் சில கருத்துக்களைத் தெள்ளத் தெளிவர்க உள்ளத்தில் இருத்திக் கொண்டால், மன ஆரோக்கியம் நிச்சயம். சில சமயம் சில மருந்துகள் கசக்கத்தான் செய்யும், கஷ்டமாகத்தான் இருக்கும். விழுங்கித்தான் பார்ப்போமே.

1. அடுத்தவரைச் சேரவேண்டிய செல்வம், நம் இல்லத்தில் இருந்தால், நம் வீடு தேடிவரும் லட்சுமி, நம் வீட்டினுள் நுழையாமல் வாசற்படியிலேயே நின்று விடுவாள். ஆரத்தி எடுத்து வரவேற்க வேண்டியவளை வாசலிலேயே நிறுத்தி விடலாமா?

2. எல்லோருக்கும் தெரியும் ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள். மூன்றாவது பக்கம் ஒன்று உண்டு, ‘நாம் யார் மனதையும், புண்படுத்தாமல், ஏமாற்றாமல் ஈட்டிய நாணயம் இது’ என்று நம் மனசாட்சி, குத்திய முத்திரை பதிந்த பக்கம்தான், நம் அகக்கண் மட்டுமே அறிந்த, அந்த மூன்றாவது பக்கம். நாம் வைத்திருக்கும் நாணயம், நம்மிடம் தங்குவதும், தவறிப் போவதும், அந்த மூன்றாவது முத்திரையைப் பொறுத்திருக்கிறது.

3. நாம் ஈட்டிய பொருள் நம் குழந்தைகள் கையில்தான் போய்ச்சேரும் என்று எத்தனை நம்பிக்கையுடன் பொருள் சேர்க்கிறோமோ அதே நம்பிக்கையை நம் பாவபுண்ணியங்களும் நம் குழந்தைகளைப் போய்ச் சேரும் என்பதிலும் வைக்க வேண்டும். நாம் ஆயிரத்துக்கு அடுத்தவரை ஏமாற்றினால் நம் குழந்தைகள் இலட்சத்தை, யாரிடமாவது இழந்து நிற்பார்கள். அர்ஜுனனின் அம்பு கூடக் குறி தவறலாம். நம் பாவ புண்ணியங்களின் பலன்கள், சந்தேகத்துக்கு இடம் இல்லாமல், அது நம் சந்ததியருக்குத்தான்.

4. சட்டப்படி நாம், நம் முன்னோர்களின் சொத்துக்கு, நூறு சதவிகிதம் சொந்தக்காரர்களாகலாம், ஆனால், தகுதிப்படி கணக்கிட்டால், பத்து கூடத் தேறாது. இதை உணராமல், சொத்துப் பத்திரங்களைத் தொட்டால் மனசாட்சி பட படக்கும். உணர்ந்து தொட்டால் நல்ல தீர்வு கிட்டும்.

5. அரியணையையும் ஆரண்ய வாசத்தையும் ஒன்றாக நினைத்து வாழ நாம் இராமர் இல்லைதான். அதறகாக, கிடைத்ததைப் பகிர்ந்துண்ணும் ஒரு காகமாகக் கூடவா வாழமுடியாது? பசிக்குத் தேவையானவற்றை எடுத்து விட்டு மீதியை விட்டு விடும் மிருகங்களாகக் கூட இருக்கலாம், தப்பில்லை. சமயத்தில் ஐந்தறிவு ஜீவன்கள் நமக்கு ஆசானாக உயர்ந்து நிற்கின்றன.

6. பணம் தேவையில்லை என்று சொல்ல நாம் முற்றும் துறந்த முனிவர் இல்லை அதற்காக அடுத்தவருக்கு உரிமையானதைத் தட்டிப் பறிக்கும்




வழிப்பறிக் கொள்ளைக்காரனாகலாமா?

7. ‘நாம் போகும் போது என்ன கொண்டு போகிறோம்’ என்ற வேதாந்தத்தை, பலனை அனுபவிப்பவர்கள், பாதிக்கப் பட்டவர்களுக்கு மட்டும் ஓதிக் கொண்டிருக்காமல், தங்கள் மனதிலும் இருத்தினால் தான், நல்ல தராசாக இயங்க இயலும்.

8. நம் சொந்த முயற்சியில் ஈட்டிய ஒரு கோடி நமக்கு அடிமை என்றால், அடுத்தவர் உரிமையைத் தட்டிப் பறித்து எடுத்த ஒற்றை ரூபா ஆயுளுக்கும் நம்மை ஆட்டி வைக்கும் சர்வாதிகாரி. கவனமாக இருப்போம்.

9. விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போகும் தயாள குணத்தை உங்களுக்கு ஆதாயமாக்கிக் கொள்ளாதீர்கள். கை ஓங்குபவர்களை முடிந்தால் எதிர்த்து அடக்க நினைக்கலாம் தவறில்லை, கை கட்டி நிற்பவர்களைக் காயப்படுத்தாதீர்கள்.

10. சொத்துப் பத்திரம் கையெழுத்துப் போடப் பட்டு ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும் என்பதால் தான அதற்குப் பத்திரம் என்றானது மட்டுமல்ல, கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார் பத்திரம் என்றும் அர்த்தமாகலாம்.

# ஆளும் கட்சியுடன் இணைந்தே கிழக்குத் தேர்தலில் போட்டி

## பிள்ளையான் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்க கட்சியுடன் இணைந்தே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போட்டியிடவுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படுமாக இருந்தால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடனேயே எமது கட்சி இணைந்து போட்டியிடும் எனத் தெரிவித்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கிழக்கு மாகாண சபைக்கு நடந்த தேர்தல், அடுத்து 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமே நடத்தப்படவேண்டும். எனினும் ஜனாதிபதி மகிந்தவுடன் கிழக்கு மாகாண சபை தேர்தலை முன்கூட்டியே நடத்துவது தொடர்பாக முதலமைச்சர் சந்திரகாந்தன் அண்மையில் கலந்துரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். குடாநாட்டில் வசிக்கும் 83 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை இல்லை

யாழ். மாவட்டத்தில் 83 ஆயிரம் பேர் தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பதாக வாக்காளர் இடாப்பு பட்டியல் விபரத்தின் மூலம் தெரியவந்துள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களினாலும் தேசிய அடையாள அட்டை எடுக்கத் தவறியவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க கிராம அலுவலர்கள் மற்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மற்றும் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளும் நடைமுறைகளை இலகுபடுத்திக் கொள்ளுமாறும் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத கருக்கலைப்பு இளம் யுவதி உயிரிழப்பு

சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபட்ட இளம் யுவதி ஒருவர் அதீத இரத்தப் பெருக்கு காரணமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த உதயகுமார் சர்மிலா (வயது - 20) என்ற யுவதி நேற்று முன்தினம் 12.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அதீத இரத்தப் பெருக்கிற்காக தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். அவரின் மரணம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

## வடக்கு தேர்தலை...

நடத்துவதற்கு அரசு தயாரா என்றும் ஜே.வி.பி. சவால் விடுத்துள்ளது. மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு எதிர்க் கட்சிகள் அஞ்சுகின்றன என அரசு தெரிவித்திருக்கும் கருத்துத் தொடர்பில் விவரிக்கையிலேயே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜே.வி.பி. தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஒருபோதும் அஞ்சாது. அரசுதான் பயத்தில் நடுங்குகின்றது. அதனால்தான் தனக்குத் தேவையான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் அரசு கட்டங் கட்டமாகத் தேர்தல்களை நடத்துகின்றது.

சுயாதீன தேர்தல் குழுவை அமைத்து, அரச வளங்களைப் பயன்படுத்தாமல் அரசு தேர்தலில் மோதுமானால் நிச்சயம் அதைத் தோற்கடிப்போம். இவ்வாறு ஜனநாயக முறைப்படி தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தயாரா என சவால் விடுக்கின்றோம்.

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தினால்தான் அரசு அங்கு தேர்தலை நடத்துவதற்குப் பின்னடிக்கின்றது. வடக்கு மாகாண சபைக்குத்தான் இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. எனவே, அங்கு தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்றார்.

## தெரிவுக்குழுவில்...

ஜனாதிபதியின் அழைப்பிற்கு அமைய அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் ரீதியான பங்களிப்பை பெறுவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வுக்கான தெரிவுக்குழுவிற்கு அவசியமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமாயின், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

அது தவிர, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் அரசாங்கமும் எதிர்கட்சியும் ஏற்றுக் கொண்ட பரிந்துரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில், அரசாங்கத் தரப்பில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா, பசில ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக ரணில் விக்கிரமசிங்கவுடன், திஸ்ஸ அத்தநாயக்க, ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா, லக்ஷ்மன் கிரியல்ல, ரவி கருணாநாயக்க. காமி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அச்சுவேலி கொலை...

குற்றச்சாட்டில் குற்றாவாளியாகக் காணப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டது. இலங்கை தண்டனை சட்டக் கோவை 296 ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய கொலைக்குற்றத்துக்கு எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

மரணதண்டனை விதிப்பதற்கு முன்னர் நீர் ஏதாவது கூற விரும்புகின்றீரா என எதிரியைப் பார்த்து நீதிபதி வினவியபோது தனக்கும் இந்தக் கொலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்றும் தான் இந்தக் கொலையை செய்யவில்லை எனவும் அவர் பதிலளித்தார். பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டது.

இலங்கை ஜனநாயகக் குடியரசின் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி நியமிக்கும் ஒரு திகதியில் ஜனாதிபதி நியமிக்கும் ஒரு இடத்தில் உமது கழுத்தில் சுருக்கிட்டு தொங்க விட்ட நிலையில் உமது உயிர் பிரியும் வரை தூக்கிலிடப்படுவீர் என நீதிபதி ஜெ.விஸ்வநாதனால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

2,3,4,5,6 ஆம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்துக்கப்பால் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து அவர்களை நீதிபதி விடுதலை செய்தார்.

1,2,3,5,6 ஆம் எதிரிகளுக்காக சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜரானார். 4 ஆம் எதிரிக்காக சட்டத்தரணி கே.பீ.எஸ்.வரதராஜா ஆஜரானார். (137,எஸ்)

## இலங்கை...

வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும், வெளிநாடுகளில் பல்வேறு அரசியல்கட்சிகளில் உள்ள அவர்களின் ஆதரவாளர்களும் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் மீளத் தொடங்குவதைக் குழப்பும் சதி வேலைகளில் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவர்களின் தந்திரோபாயத்தின் ஒரு பகுதியே ஒஸ்லோ கூட்டம் என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

மேலும் போருக்குப் [illegible]திய நல்லிணக்கத்தில் தமிழ் [illegible]தசியக் கூட்டமைப்புக்கு உ[illegible]மயிலேயே நம்பிக்கையிருந்தால், விரோத நடவடிக்கைளை நிறுத்த வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஐலன்ட் மேலும் தெரிவித்துள்ளது.

## மீள்குடியேற்ற...


அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

## அமெரிக்கா...

இதுவாகும். இதேவேளை, கடந்தவாரம் இராஜாங்கத் திணைகளத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது, ஜீ.எல்.பீரிஸின் அமெரிக்க விஜயம் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது, இலங்கையின் மீளமைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான செயற்திட்டம் ஒன்றை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஹிலாரி கிளின்டனை சந்தித்து, அரசாங்கத்தின் திட்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ராயுடுவின் அதிரடியால் மும்பை திரில் வெற்றி



(பெங்களூர்)

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் மும்பை இன்டியன்ஸ் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவெ ன்ரி - 20 கிரிக்கெட் தொடரின் 62 ஆவது போட்டி நேற்று பெங்களூர் சின்னச்சாமி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இன்டியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம்.அகர்வால் 30 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் டில்சான் 47 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரதாப் சிங், போலாட் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை இன்டியன்ஸ் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஏ.ராயுடு 54 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 81 ஓட்டங்களையும், போலாட் 31 பந்துகளில் மூன்று சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை முரளிதரன் வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஏ.ராயுடு தெரிவானார்.

# சென்னையிடம் வீழ்ந்தது கொல்கத்தா நைட்ரைடர்ஸ்

(கொல்கத்தா)

கொல்கத்தா நைட்ரைடர்ஸ், சென்னை சுப்ப கிங்ஸ் இடையே நேற்று நடைபெற்ற பரபரப்பான போட்டியில் சென்னை சுப்ப கிங்ஸ் 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வுசெய்தது சென்னை. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. 11.3 ஓவரில் 99 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்த கொல்கத்தா அணி பின்னர் வந்த ஓவர்களில் ரன் குவிக்கத் திணறியது. அவ்வணி சார்பாக கம்பீர் 62, மக்கலம் 37 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜகத்தி 2, ஹில்பென்கோஸ், அஸ்வின், ஜடேஜா மூவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அவ்வணியின் ஆரம்ப வீரர்களான மைக் ஹசி 56, முரளி விஜய் 36 ஓட்டங்களை எடுத்து சிறந்த அடித்தளத்தை இட்டனர். பின்னர் வந்த டோனி 28, பிராவோ 11 ஓட்டங்களை எடுத்து அணியை வெற்றிபெறச் செய்தனர்.

பந்துவீச்சில் நரைன், பாட்டியா தலா 2 விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மைக் ஹசி தெரிவானார்.

## மர்மப்பொருள்...

சிறுவர்கள் விளையாடும் இடங்களை சுத்தமாக வைத்திருப்பதுடன் நிலத்திலிருந்து எடுக்கப்படுகின்ற இரும்புப் பொருட்கள் மற்றும் மர்மப் பொருட்களை கையாள வேண்டாம் என சிறுவர்களை அறிவுறுத்த வேண்டியது பெற்றோரின் கடமை என அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான பொருட்கள் கிடைத்தால் அதற்கு சேதம் விளைவிக்க முற்படாது, பெரியவர்களுக்கு தெரியப்படுத்துமாறு சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பல இலட்சம்...

நேற்று பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்ற வேளை வீட்டிலுள்ள ஆண்கள் வேலைக்குச் சென்றிருந்த நிலையில் வீட்டு உரிமையாளரின் மனைவி பொருட்கள் கொள்வனவிற்காக கடைக்குச் சென்றிருந்ததை அவதானித்த திருடர்கள் வீட்டின் பக்கமாக உள்ள கதவினை அலவாங்கால் உடைத்துக்கொண்டு உட்புகுந்து நீண்டநேரமாக வீட்டிலுள்ள பொருட்களை துருவித் துருவி ஆராய்ந்ததுடன், பல்வேறு தேவைகளுக்காக வீட்டார் வைத்திருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும் 80 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளையும் கொள்ளையிட்டுள்ளனர்.

கடைக்குச் சென்று வீடு திரும்பிய வீட்டு உரிமையாளரின் மனைவி வீட்டில் ஆள் நடமாட்டம் தெரிவதைக் கண்டவுடன் கூக்குரலிடவே திருடர்கள் அலவாங்கை குறித்த பெண்ணை நோக்கி எறிந்துவிட்டு தாம் அணிந்திருந்த காலணிகளையும் கைவிட்டு விட்டு திருடிய நகை மற்றும் பணத்துடன் தப்பியோடியுள்ளனர்.

யாழ். பொலிஸாருக்கு வீட்டார் செய்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தடயங்களைப் பதிவு செய்ததுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர். பட்டப் பகல் வேளையில் இடம்பெற்ற இத்துணிகர திருட்டுச் சம்பவத்தால் அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். (26,137)

# கருத்துச் சுதந்திரமில்லாத கூட்டமைப்பின் மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பு நடத்திய அரசியல் கருத்தரங்கில் ஜனநாயகம் நிலவவில்லை. ஜனநாயக சூனியத்தின் மத்தியில் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் மாற்றுக் கருத்துக்கள் தெரிவிக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எந்தக் கட்சிக்கும் ஆதரவு வழங்காத அரச உத்தியோகத்தராகிய நான் எனது சொந்தக் கருத்தை கேள்வி நேரத்தின்போது தெரிவிக்க எனக்கு கருத்துச் சுதந்திரம் வழங்கப்படவில்லை என்பது எனது வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத துயராக உள்ளது என்று நேற்று முன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற அரசியல் விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரச ஊழியரான ராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஜனநாயக அடிப்படையில் அரசியல், சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கேள்வி நேரத்தின்போது தமக்கு நிகழ்ந்த அதிர்ச்சியூட்டும் சம்பவம் குறித்து விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் இந்தச் சம்பவம் பற்றி மேலும் குறிப்பிடுகையில், நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும், அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர்களும் உரையாற்றினர். தொடர்ந்து சட்டத்துறை விரிவுரையாளர் குருபரனின் உரையும் இடம்பெற்றது. இதனையடுத்து பார்வையாளர்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டது. இதன்போது நான் எழுந்து எமக்கு வெள்ளையர்கள் தேவையில்லை. எமது பிரச்சினையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்த்து வைப்பார். அவருடன் பேசி எமது பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டலாம் என்று மகாத்மா காந்தி வெள்ளையனே வெளியேறு என்று கோரி போராடினார். எனவே வெள்ளையர்கள் எமக்குத் தேவையில்லை. மகிந்த ராஜபக்ஷவே போதும் என்றும் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்தரங்கில் இருந்த கூட்டமைப்பினர் எனது கையிலிருந்த ஒலிவாங்கியை பறித்தெடுத்ததுடன் பேச்சை நிறுத்துமாறும் என்னை மிரட்டினார்கள். நான் தொடர்ந்து பேச முனைந்தபோது எனது சேட்டைப் பிடித்து தள்ளிவிட்டனர். எனது சட்டைப்பையில் இருந்த கண்ணாடியும் கீழே வீழ்ந்தது. அதனை எடுத்தவாறு தொடர்ந்து இருக்கையில் அமர்ந்தபோது சிலர் அங்கிருந்து வெளியேறிவிடும்படி தெரிவித்தனர். சுதாரித்துக்கொண்டு அங்கிருந்து வெளியே வந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே வந்த என்னை ஒருவர் கடும் தொனியில் நிற்குமாறு கூறினார். ஆனால் நான் நிற்கவில்லை. வீடு வந்து சேர்ந்துவிட்டேன்.

கிறிஸ்தவனாகிய நான் எனது பையில் மகிந்த ராஜபக்ஷவினுடைய படத்தையும் பைபிளையும் அந்தக் கருத்தரங்கிற்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது கருத்தரங்கு மண்டபத்தை விட்டு வெளியே வந்தபோது அங்கு நின்றிருந்த நபர்களால் தாக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

## பொலநறுவையில் சேதமாக்கப்பட்ட புராதன சிவன் கோவில் கருவறை



(பொலநறுவை)

வரலாற்று முக்கியத்துவம் மிக்க பொலன்னறுவை புனித பிரதேசத்தில் உள்ள புராதன சிவன் கோவில், புதையல் தோண்டுபவர்களெனக் கருதப்படும் குழுவினால் சேதமாக்கப்பட்டிருப்பது இந்து மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது

13ஆம் நூற்றாண்டு காலத்திற்குச் சொந்தமானதெனக் கருதப்படும் இந்தப் புராதன சிவாலயத்தின் கருவறையில் சிவலிங்கத்தின் கீழ் பகுதியின் கருங்கற்கள் அகற்றப்பட்டு சுமார் மூன்றரை அடி ஆழத்திற்கு குழி தோண்டப்பட்டுள்ளது. புதையல் தோண்டும் ஒரு குழுவினரால் இது சேதப்படுத்தப்பட்டிருக்கலாமெனக் கருதப்படும் அதேசமயம், இது எப்போது இடம்பெற்றது என்பது குறித்து உடனடியாகத் தெரிய வரவில்லை

தொல்பொருள் திணைக்களம் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பொலிஸாருக்கும் இது குறித்து முறையிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## மருத்துவ சேவைக்காக மக்கள் ஏக்கம் அனலைதீவில் தொடரும் அவலம்

(அனலைதீவு)

கடந்த சில மாதங்களாக அனலைதீவு பகுதி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரியவருகின்றது.

எழுவைதீவு, அனலைதீவு என இரண்டு தீவுகளும் கடல் கடந்து இருப்பதால் இப்பகுதிகளுக்கான நிரந்தர வைத்தியர்கள் தேவை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது எழுவைதீவுப் பகுதியில் இருக்கின்ற வைத்தியர் ஒருவரே அனலைதீவுப் பகுதியிலும் குறிப்பிட்ட மணிநேர சேவையினைச் செய்து வருவதாகவும் தெரியவருகின்றது.

இந்த வைத்தியர் பற்றாக்குறை சம்பந்தமாக ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளர் ஜெயகாந்தனிடம் மக்கள் முறையிட்டு இருப்பதாகவும், இது தொடர்பாக தவிசாளர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரனிடம் (கமல்) தெரியப்படுத்திய பின்னர், இவர் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோருக்கு வைத்திய பற்றாக்குறை சம்பந்தமான மனுக்கள் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய வைத்தியசாலைகள் வைத்திய உபகரணங்கள் உட்பட அனைத்து வைத்திய சேவைகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. (85)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பூபதி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பூபதி நேற்று (14.05.2012) காலமானார். அன்னார் கலஞ்சென்ற சரவணை சின்னமா தம்பதிகளின் புதல்வியும், ஏரம்பு அன்னமா தம்பதிகளின் மருமகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், சாந்தகுமார் (மாவட்ட நீதிமன்றம் - சாவச்சேரி) சதீஸ்குமாரி, விஜயகுமாரி (லிகிதர், ஜனாதிபதி சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெயரஜனி, தர்மதாஸன், சந்திரகுமார் ஆகியோரின் மாமியாரும், தர்சினி, கஸ்தூரி, கோபிகா, கலியுகன், தனுஸன், தாட்சாயினி ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.30 இற்கு இடம்பெற்று, தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சங்வேலிப்பிள்ளையார் கோவில்
சங்குவேலி.

தகவல்
க.சாந்தகுமார் (மகன்)

## கொட்டகதெனியவின் வளர்ப்பு நாய் பலரைக் கடித்ததாக முறைப்பாடு



(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.எம்.பி. கொட்டகதெனியவின் வளர்ப்பு நாயானது அயலவர்கள் பலரை கடித்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தனது குழந்தையையும் இந்நாய் கடித்துள்ளதாக இலங்கையின் குறுந்தூர ஓட்ட நட்சத்திரமான சிறியானி குலவன்ஸ, தலங்கம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக தலங்கம நீதவானுக்கு பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

பொதுமக்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்திய இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக அறிவித்தலொன்று விடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அந்நாயின் வாய்க்கு மூடியொன்றை அணிவிக்கவும் அதன் எஜமானர் இணங்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக தலங்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 75 முன்னாள் போராளிகள் யூலை மாதம் விடுதலை

(கொழும்பு)

ஒரு வருட கால புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 75 பேர் எதிர்வரும் ஜூலை மாதம் விடுதலை செய்யப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்து இவர்கள் சமூகமயப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ராஜகுரு தெரிவித்துள்ளார்.

680 முன்னாள் போராளிகள் தற்போது புனர்வாழ்வு பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலை செய்யப்படவுள்ள முன்னாள் போராளிகளின் மறுவாழ்வுக்காக நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிலர் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய சுய தொழில் வாய்ப்பிற்காக 25 இலட்சம் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொன்சேகாவின் வழக்கு யூன் மாதம் ஒத்திவைப்பு



இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களை கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டமை தொடர்பில் சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான சரத் பொன்சேகா நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலை அதிகாரிகள் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதனால் அவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை என சிறைச்சாலை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ வழக்கை ஜூன் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றைய தினம் சந்தேக நபரின் சுகாதார நிலை குறித்து நீதிமன்றிற்கு அறிக்கை சமர்பிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களை, கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டு அவர்களுக்கு சம்பளம் வழங்கி அரசுக்கு எதிராக சூழ்ச்சிகளை மேற்கொண்டதாக சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது


## கணக்காளர் தேவை

**கணக்காளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

* **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களும், கணக்காளராக சேவையாற்றிய அனுபவம் உள்ளவர்களும் கணக்கியல் துறையில் பட்டதாரிகளாக உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
* **கணினி அறிவும், ஆங்கில அறிவும் அவசியமாகக் கருதப்படும். தினசரிப் பத்திரிகையில் கடமையாற்றிய அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.பிரதான வீதியில், இல.373 இல் உள்ள தினமுரசு அலுவலகத்தில் ஆளணி முகாமையாளரைச் சந்தித்து தமது விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க முடியும்.**

**ஆளணி முகாமையாளர்,
தினமுரசு.**

**இல.373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.